THE HINDU - ENGLISH
Dated : 02.02.2025

# Budget brings in plenty for poll-bound Bihar; RJD flags lack of special package


**Sobhana K. Nair**
**Amit Bhelari**
NEW DELHI/PATNA


Dressed in a cream and red Madhubani sari, featuring Bihar's iconic art, Finance Minister Nirmala Sitharaman heaped promises on the poll-bound State in her Budget presentation on Saturday.

The slew of projects kept key NDA ally, the Janata Dal (United), in good humour, while generating envy from other regional parties, as well as taunts from the Opposition's Rashtriya Janata Dal (RJD), which termed the announcements empty rhetoric in the absence of a special package for the State.



Bihar is set to go to the polls later this year.

Key announcements include ₹11,500 crore of financial support for the Western Koshi Canal Extension, Renovation, and Modernisation (ERM) Project, and a new Makhana Board for foxnut farmers.

The canal project, Ms. Sitharaman said, would benefit "farmers cultivating over 50,000 hectares of land in Bihar".

Applauding the announcements, Bihar Chief Minister and JD(U) chief Nitish Kumar said that the Union Budget was positive and progressive. "The Budget will give further impetus to the development of Bihar" and "will accelerate the economic development of the State," he said.


**CONTINUED ON » PAGE 16**


## Budget brings in plenty for poll-bound Bihar

The RJD, on the other hand, questioned both the symbolism and substance of the announcements. RJD leader and former Deputy Chief Minister Tejashwi Yadav said that none of these promises were new. "Everyone including the Bihar government was demanding a special package, which we did not get. The Budget is completely a *jumlabaazi* (claptrap)," Mr. Yadav said. RJD leader and Rajya Sabha MP Manoj K. Jha dismissed it as "old wine in an old bottle with a stinky wrapper".

The Mithalanchal region of the State got special attention in the Budget. Mithila Makhana got a Geographical Indication (GI) tag in 2022, and 80% of India's total makhana production is harvested in Bihar. The Makhana Board will "improve production, processing, value addition, and marketing" of foxnuts, the Finance Minister said. The move is likely to benefit over five lakh farmers in the region, especially in the districts of Darbhanga, Madhubani, Sitamarhi, Saharsa, Katihar, Purnia, Kishanganj, Araria, Supaul, and Madhepura. Foxnut farmers are predominantly from extremely backward classes, a group that the RJD has been actively trying to woo.

Aviation is another sector set to get a boost in Bihar. "Greenfield airports will be facilitated in Bihar to meet the future needs of the State. These will be in addition to the expansion of the capacity of Patna airport and a brownfield airport at Bihta," Ms. Sitharaman said, though no specifics were shared on where the new airports will be located.

**Education and temples**

"An additional allocation to support capital investments will be provided. The requests of the Bihar government for external assistance from multilateral development banks will be expedited," Ms. Sitharaman said. Under the Union government's Purvodaya initiative to develop eastern India, a National Institute of Food Technology, Entrepreneurship, and Management will be established in Bihar. The Budget promises an expansion of hostel and other infrastructure facilities at the Indian Institute of Technology, Patna.

Ms. Sitharaman also promised support for the comprehensive development of the 17 Vishnupad and the Mahabodhi temple corridor, along the lines of the Kashi Vishwanath temple corridor, and pledged aid to develop Nalanda as a tourist centre and revive the Nalanda University to its "glorious stature".

The Lok Janshakti Party (Ramvilas) president and Union Minister Chirag Paswan, credited the National Democratic Alliance's "double engine" government for "laying the foundation of a developed Bihar".

Meanwhile, taking a potshot at the government, senior Congress leader Jairam Ramesh said that it was only natural for the government to offer a "bonanza" to Bihar where an election is due later this year. At the same time, he asked, "But why has the other pillar of the NDA, namely Andhra Pradesh, been so cruelly ignored?"

THE HINDU - ENGLISH

Dated: 02.02.2025

# Former Chief Election Commissioner Navin Chawla passes away at 79

**The Hindu Bureau**
NEW DELHI

Former Chief Election Commissioner of India (CEC) Navin Chawla passed away on Saturday. He was 79.

Mr. Chawla was the 16th CEC from April 21, 2009, to July 29, 2010. He had been Election Commissioner from 2005. He died here at Apollo Hospital where he had been admitted for a brain surgery.

Condoling his death, the Election Commission (EC), in a statement, said: "Shri Chawla, during his tenure, led many reforms including enabling third gender voters to exercise a preference to vote in a new category of "other", instead of being compelled to vote as "male" or "female".

Former CEC S.Y. Quraishi posted on X: "Sad to know about passing on of Shri Navin Chawla, former Chief Election Commissioner of India. May his soul rest in peace."



Navin Chawla

Mr. Chawla joined the Indian Administrative Service in 1969. In the course of his career, he served in the governments of Delhi, Goa, Puducherry, and Lakshadweep as well as the Ministries of Labour, Home, and Information and Broadcasting. As the Joint Secretary and later as Secretary, he helped to shape the "Open-Sky" policies.

During his tenure as CEC, he successfully completed the general elections in April-May 2009 and initiated several important reforms.

His tenure as Election Commissioner was mired in controversy when then CEC N. Gopalaswami recommended his removal from the EC to the government. It was the culmination of differences within the three-member commission on many crucial decisions.

Mr. Gopalaswami's recommendation, which came about three months before he was to demit office as CEC, was based on a petition by the BJP, which had complained against the "partisan" functioning of Mr. Chawla.

It was, however, rejected by then-President Pratibha Patil. The Supreme Court had also dismissed a lawsuit that sought his removal.

Mr. Chawla had recommended to the Law Ministry that a constitutional amendment be made to bring the process of removal of Election Commissioners at par with that of the CEC, which was by impeachment by two-thirds of MPs present and voting.

Mr. Chawla had a long association with Mother Teresa. In 1992, he wrote her biography, titled "*Mother Teresa*". His interest in the leprosy condition also resulted in a report on "The vocational rehabilitation and social reintegration of the leprosy affected in India", which was released by Mother Teresa in 1987.

TIMES OF INDIA
Dated: 02.02.2025

# Ex-CEC Navin Chawla, who ushered in reforms for 3rd gender, passes away

**New Delhi:** Former chief election commissioner (CEC) **Navin Chawla**, who ushered in a key reform for third gender voters, passed away on Saturday. He was 79.



Condoling the passing of Chawla, the election commission said he led many reforms, including enabling third gender voters to exercise a preference to vote in a new category of 'Other', instead of being compelled to vote as 'Male' or 'Female'.

The poll body recalled in a statement that Chawla as the 16th CEC advocated for constitutional reforms to bring on par the process of removal of election commissioners with that of the CEC.

"His leadership and commitment to the electoral process will continue to inspire us at the Election Commission of India," the statement said. Another former CEC, S Y Quraishi, told PTI that he met Chawla some 10 days back when the latter had informed him that he was getting admitted to hospital for a brain surgery.

"He passed away this morning at Apollo Hospital," Quraishi said, adding that he was cheerful when they last met. Chawla was a 1969-batch officer of Indian Administrative Services (IAS), AGMUT cadre.

"Sad to know about passing of Shri Navin Chawla, former Chief Election Commissioner of India. May his soul rest in peace," Quraishi wrote on X.

A former bureaucrat, Chawla was the election commissioner (EC) between 2005 and 2009, and then chief election commissioner from April 2009 to July 2010.

Chawla had a controversial tenure in the poll body, with the then opposition BJP accusing him of being partisan. In 2009, CEC N Gopalaswami recommended to the government to remove Chawla, who was an election commissioner at the time.

The recommendation, on which the government did not act, was based on a petition filed by the BJP which complained against Chawla's 'partisan' functioning.

In 2006, the then leader of opposition in the Lok Sabha, L K Advani, and 204 MPs submitted a petition to the then president A P J Abdul Kalam, seeking the removal of Chawla as an election commissioner for alleged partisanship.

The BJP also took the matter to Supreme Court. Born on July 30, 1945, Chawla did his schooling from The Lawrence School, Sanawar, before moving to St Stephen's College here. PTI

THE NEW INDIAN EXPRESS

Dated: 02.02.2025

## 'ECI can determine own jurisdiction'

The Election Commission has told the Madras HC, in a case filed by AIADMK general secretary Edappadi K Palaniswami, that it is competent to determine questions of its own jurisdiction, as it is vested with legislative, judicial and executive powers | P2

# Can decide locus standi of complainant in plea against party: EC to HC

EXPRESS NEWS SERVICE @Chennai

The Election Commission of India has told the Madras High Court that it is competent to determine questions of its own jurisdiction whenever required, as it is inherently vested with legislative and judicial powers apart from executive powers. Further, questions of jurisdiction, locus standi of the representing persons, question as to whether they continue to be in the party etc. when raised, can be determined by the commission while deciding any representation, and there is no bar in any law, it added.



The submission was made in a counter-affidavit before a division bench of justices R Subramanian and C Kumarappan in the case filed by AIADMK general secretary Edappadi K Palaniswami seeking to restrain ECI from doing quasi-judicial adjudication on the representations submitted by certain people, including former MPs P Ravindranath and KC Palanisamy, who sought the poll body not to acknowledge the amendments made in the party's bylaws and the consequent election of him as the general secretary. EPS had also contended that they were not members of the party. The court had temporarily restrained the ECI from proceeding with the proceedings on the matter.

ECI, in the counter-affidavit, informed that it has accepted the communication sent by the party on April 20, 2023, on the amendments made in the bylaws and the change in office-bearers and such communication was taken on record subject to the outcome of any court orders or directions in the civil cases pending on the disputes in the party.

**AIADMK filed case on quasi-judicial adjudication**

The case was filed by AIADMK general secretary Edappadi K Palaniswami seeking to restrain ECI from doing quasi-judicial adjudication on the representations submitted by certain people who sought the poll body not to acknowledge the amendments made in the party's bylaws

In order to avoid multiple proceedings and provide opportunity to other people whose representations were also on record, ECI decided to dispose of all the representations at one go and issued the notices of hearing. "The mere hearing of a person before disposing of his representation, does not qualify as adjudication of a dispute," it said.

It said notices were issued to the concerned persons based on the representations received from them between April 20, 2023, and December 4, 2024, on the issue of acknowledging the amendments to the bylaws and change in office-bearers.

THE HINDU - TAMIL
Dated: 02. 02. 2025

அதிமுக உட்கட்சி விவகாரம், இரட்டை இலை சின்னம் தொடர்பாக

# தேர்தல் ஆணையம் விசாரிக்க அதிகாரம் உள்ளது

## இபிஎஸ் மனுவை தள்ளுபடி செய்யக் கோரி பதில் மனு

சென்னை

அதிமுக உட்கட்சி விவகாரம் மற்றும் இரட்டை இலை சின்னம் தொடர்பாக விசாரணை நடத்த தேர்தல் ஆணையத்துக்கு முழு அதிகாரம் உள்ளது என்பதால், ஊகத்தின் அடிப்படையில் இபிஎஸ் தாக்கல் செய்துள்ள மனுவைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று தேர்தல் ஆணையம் உயர் நீதிமன்றத்தில் பதில் மனு தாக்கல் செய்துள்ளது.

அதிமுக உட்கட்சி விவகாரம் தொடர்பான வழக்குகளில் இறுதி முடிவு காணும்வரை அதிமுகவுக்கு இரட்டை இலை சின்னத்தை ஒதுக்கக் கூடாது என தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிடக் கோரி, திண்டுக்கல் சூரியமூர்த்தி என்பவர் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார். அந்த மனுவை விசாரித்த உயர் நீதிமன்றம், அனைத்துத் தரப்பினரின் கருத்துக்களையும் கேட்டு முடிவு எடுக்குமாறும் தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட்டிருந்தது.

அந்த உத்தரவின் அடிப்படையில் தேர்தல் ஆணையம், இந்த விவகாரம் தொடர்பாக ஓபிஎஸ், இபிஎஸ் மற்றும் அதிமுக உட்கட்சி விவகாரம் தொடர்பாக வழக்கு தொடர்ந்திருந்த அனைவருக்கும் சம்மன் அனுப்பி விசாரணை நடத்தியது.

அப்போது அதிமுக பொதுச் செயலாளராக பழனிசாமியை அங்கீகரிக்கக் கூடாது எனக் கூறி, ஓ.பி.ரவீந்திரநாத், வா.புகழேந்தி, பி.ராம்குமார் ஆதித்தன், பி.காந்தி, எம்.ஜி.ராமச்சந்திரன், கே.சி.பழனிசாமி, சூரியமூர்த்தி ஆகியோர் தேர்தல் ஆணையத்தில் மனு அளித்திருந்தனர். அதிமுக பொதுச் செயலாளர் பதவி மற்றும் அதிமுக பொதுக்குழு தொடர்பான வழக்கு ஏற்கெனவே உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வரும் நிலையில், அதே விவகாரம் தொடர்பாக தேர்தல் ஆணையம் விசாரணை நடத்தக்கூடாது என தடை விதிக்கக் கோரி இபிஎஸ் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவை விசாரித்த உயர் நீதிமன்ற நீதிபதிகள் ஆர். சுப்பிரமணியன், சி.குமரப்பன் ஆகியோர் அடங்கிய அமர்வு, இது தொடர்பாக தேர்தல்ணையம் எந்த விசாரணையும் நடத்தக் கூடாது என இடைக்காலத் தடை விதித்து, தேர்தல் ஆணையம் பதில் அளிக்க உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில்தேர்தல் ஆணையம் தரப்பில் தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள பதில் மனு:

அதிமுக உட்கட்சி விவகாரம் தொடர்பாகவும், இரட்டை இலை சின்னம் தொடர்பாகவும் தேர்தல் ஆணையத்தில் மொத்தம் 6 புகார் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அவற்றை ஒவ்வொன்றாகப் பரிசீலிக்கும் வகையில், அது தொடர்பாக பதிலளிக்க சம்பந்தப்பட்ட எதிர்மனுதாரர்களுக்கு உத்தரவிடப்பட்டது.

இந்நிலையில் வா.புகழேந்தி, ராம்குமார் ஆதித்தன் ஆகியோர் டெல்லி உயர் நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்குகளில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளின் அடிப்படையில், அந்தப் புகார்களும் சேர்த்து விசாரிக்கப்பட்டன. இந்த விவகாரத்தில் தேர்தல் ஆணையம் சட்டத்துக்குட்பட்டு, மிகவும் எச்சரிக்கை உணர்வோடு செயல்பட்டு வருகிறது.

சுதந்திரமான, அரசியலமைப்பு சட்டத்தின் கீழ் இயங்கும் தேர்தல் ஆணையத்துக்கு மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் கீழ் பதிவு பெற்ற அரசியல் கட்சியினருக்கிடையே நிகழும் உட்கட்சிப் பிரச்னைகள், சின்னங்கள் ஒதுக்கீடு போன்ற விவகாரங்களில் தலையிட்டு தீர்வுகாண நீதித்துறைக்கு இணையான முழு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால், இந்த வழக்கை தொடர்ந்துள்ள பழனிசாமி வழக்கின் முழு பின்னணி விவரங்களையும் தனது மனுவில் தெரிவிக்காமல், ஊகத்தின் அடிப்படையில் மனுவை தாக்கல் செய்து தடை உத்தரவும் பெற்றுள்ளார். எனவே, பழனிசாமி தாக்கல் செய்துள்ள மனு விசாரணைக்கு உகந்தது அல்ல என்பதால் தடையை நீக்கி, அந்த மனுவையும் தள்ளுபடி செய்ய வேண்டும். இவ்வாறு அந்த மனுவில் கோரியுள்ளார்.

இதையடுத்து இந்த வழக்கின் அடுத்தகட்ட விசாரணையை பிப்.6-ம் தேதிக்கு தள்ளிவைத்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

DAILY THANTHI

Dated: 02. 02. 2025

ஈரோடு கிழக்கு தொகுதி

# இடைத்தேர்தல் பிரசாரம் நாளை ஓய்கிறது

ஈரோடு, பிப்.2-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க.வின் வி.சி. சந்திரகுமார், நாம் தமிழர் கட்சியின் சீதாலட்சுமி உள்பட மொத்தம் 46 வேட்பாளர்கள் போட்டியில் உள்ளனர். தி.மு.க. மற்றும் நாம் தமிழர் கட்சி வேட்பாளர்கள் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தி.மு.க. சார்பில் மாவட்ட செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி தலைமையில் தி.மு.க.வினர் தொகுதிக்குட்பட்ட 33 வார்டுகளிலும் வீதி வீதியாக நடந்து சென்று பொதுமக்களை சந்தித்து வாக்குகள் சேகரித்தனர்.

நாம் தமிழர் கட்சி வேட்பாளருக்காக கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் ஈரோட்டில் முகாமிட்டு தினந்தோறும் பிரசார பொதுக்கூட்டங்களில் பேசி வருகிறார். தொண்டர்களும் வீதி வீதியாக சென்று மக்களை சந்தித்து வருகிறார்கள். சுயேச்சை வேட்பாளர்களும் ஆட்டோ, சரக்கு வாகனங்களில் தொகுதி முழுக்க சென்று வாக்குகள் கேட்டு வருகிறார்கள். இதனால் இடைத்தேர்தல் பிரசாரம் களைகட்டியிருந்தது. இந்த நிலையில் நாளை (திங்கட்கிழமை) மாலை 6 மணியுடன் பிரசாரம் ஓய்கிறது. அதைத்தொடர்ந்து வெளியூர்களை சேர்ந்த கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் வெளியேற வேண்டும் என தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

வருகிற 5-ந் தேதி வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

DAILY THANTHI

Dated: 02.02.2025

# முன்னாள் தலைமை தேர்தல் கமிஷனர் நவீன் சாவ்லா மரணம்

புதுடெல்லி, பிப்.2-

இந்தியாவின் 16-வது தலைமை தேர்தல் கமிஷனராக பதவி வகித்தவர் நவீன் சாவ்லா. இவர் ஏப்ரல் 2009 முதல் ஜூலை 2010 வரை தலைமை தேர்தல் கமிஷனராக இருந்தார்.

இந்த நிலையில் மூளை அறுவை சிகிச்சைக்காக நவீன் சாவ்லா கடந்த சில நாட்களுக்கு முன்பு டெல்லி அப்பல்லோ ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.



அங்கு அவர் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று காலை மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்தார். அவருக்கு வயது 79. இந்த தகவலை மற்றொரு முன்னாள் தலைமை தேர்தல் கமிஷனரான எஸ்.ஒய்.குரேஷி தெரிவித்தார். சாவ்லாவின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ள தேர்தல் கமிஷன் அவர் பல சீர்திருத்தங்களுக்கு தலைமை தாங்கினார் என்றும், குறிப்பாக மூன்றாம் பாலின வாக்காளர்கள் 'ஆண்' அல்லது 'பெண்' என்ற பிரிவில் வாக்களிக்க வேண்டிய கட்டாயத்துக்கு பதிலாக 'மற்றவர்கள்' என்ற புதிய பிரிவில் வாக்களிக்க வழிவகை செய்தது அவர்தான் என்றும் புகழாரம் சூட்டியுள்ளது.

1969-ம் ஆண்டு இந்திய நிர்வாகப் பணியில் சேர்ந்த நவீன் சாவ்லா, தனது பணிக்காலத்தில் டெல்லி, கோவா, புதுச்சேரி மற்றும் லட்சத்தீவு அரசாங்கங்களிலும், தொழிலாளர், உள்துறை மற்றும் தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகங்களிலும் பணியாற்றி உள்ளார். 2005-ம் ஆண்டு தேர்தல் கமிஷனராக நியமிக்கப்படுவதற்கு முன்பு, சாவ்லா மத்திய அரசின் பல்வேறு துறைகளில் பல முக்கிய பொறுப்புகளை வகித்துள்ளார்.

2009-ல் தலைமை தேர்தல் கமிஷனராக பொறுப்பேற்ற அவர், தனது பதவிக்காலத்தில், ஏப்ரல்-மே 2009-ல் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தல்களை வெற்றிகரமாக நடத்தி முடித்தார்.

DAILY THANTHI

Dated: 02.02.2025

அ.தி.மு.க. உட்கட்சி விவகாரத்தில் கோர்ட்டுக்கு இணையாக

# தேர்தல் கமிஷன் விசாரணை நடத்த அதிகாரம் உள்ளது

## ஐகோர்ட்டில், தலைமை தேர்தல் அதிகாரி பதில் மனு

சென்னை, பிப்.2-

அ.தி.மு.க., உட்கட்சி விவகாரத்தில் கோர்ட்டுக்கு இணையாக விசாரணை நடத்த தேர்தல் கமிஷனுக்கு அதிகாரம் உள்ளது என்று சென்னை ஐகோர்ட்டில் மாநில தலைமை தேர்தல் அதிகாரி பதில் மனு தாக்கல் செய்துள்ளார்.

### இரட்டை இலை

அ.தி.மு.க.வின் உட்கட்சி விவகாரம் தொடர்பான வழக்குகளில் இறுதி தீர்வு காணும் வரை, அந்தக் கட்சிக்கு இரட்டை இலை சின்னம் ஒதுக்கக் கூடாது என்று இந்திய தேர்தல் கமிஷனுக்கு திண்டுக்கல்லை சேர்ந்த சூரியமூர்த்தி என்பவர் புகார் மனு அனுப்பினார்.

இந்த மனு பரிசீலிக்கப்படாததால், சென்னை ஐகோர்ட்டில் அவர் வழக்கு தொடர்ந்தார்.

### பரிசீலனை

இந்த வழக்கை விசாரித்த ஐகோர்ட்டு டிவிசன் பெஞ்ச் நீதிபதிகள், சூரியமூர்த்தியின் மனுவை 4 வாரத்தில் பரிசீலிக்க வேண்டும் என்று தேர்தல் கமிஷனுக்கு உத்தரவிட்டனர்.

மேலும், இந்த விவகாரத்தில் எடப்பாடி பழனிசாமி, ஓ.பன்னீர்செல்வம் உள்ளிட்டோரின் கருத்தையும் தேர்தல் கமிஷன் கேட்க வேண்டும் என்றும் கூறி இருந்தனர். இந்த உத்தரவின் அடிப்படையில் இந்திய தேர்தல் கமிஷன் நோட்டீஸ் அனுப்பி விசாரணையை தொடங்கியது.

### எடப்பாடி பழனிசாமி வழக்கு

இதற்கிடையில், அ.தி.மு.க. உட்கட்சி விவகாரம் குறித்து முன்னாள் எம்.பி., கே.சி.பழனிசாமி உள்ளிட்டோர் அனுப்பிய புகார் மனுக்களையும் தேர்தல் கமிஷன் விசாரணைக்கு எடுத்தது.

இதற்கு தடை விதிக்கக் கோரி சென்னை ஐகோர்ட்டில், எடப்பாடி பழனிசாமி வழக்கு தாக்கல் செய்தார்.

அதில் அ.தி.மு.க.வில் உறுப்பினராகஇல்லாதகே.சி.பழனிசாமி,வக்கீல் ராம்குமார் ஆதித்தன் உள்பட 6 பேருடைய மனுக்களை தேர்தல் கமிஷன், நீதிமன்றம் விசாரணைக்கு இணையான விசாரணையை நடத்துகிறது. அரசியல் கட்சி விவகாரத்தில் தேர்தல் கமிஷன் ஓரளவு தான் தலையிட முடியும். எனவே, விசாரணைக்குதடை விதிக்கவேண்டும்"என்று கூறியிருந்தார்.

### தடை விதிப்பு

இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் ஆர்.சுப்பிரமணியன், சி.குமரப்பன் ஆகியோர் கொண்ட டிவிஷன் பெஞ்ச் தேர்தல் கமிஷனுக்கு விசாரணைக்கு தடை விதித்தது. மேலும்எடப்பாடி பழனிசாமி தாக்கல் செய்த வழக்கிற்கு பதில் அளிக்கவும் தேர்தல் கமிஷனுக்கு உத்தரவிட்டனர்.

இதற்கிடையே எடப்பாடி பழனிசாமி தொடந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சென்னை ஐகோர்ட்டில், இந்திய தேர்தல் கமிஷன் சார்பில், மாநில தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் பதில் மனு தாக்கல் செய்துள்ளார். அதில் கூறியிருப்பதாவது:-

### நீதித்துறை அதிகாரம்

வக்கீல் ராம்குமார் ஆதித்தன், புகழேந்தி ஆகியோர் டெல்லி ஐகோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்து, அந்த வழக்குகளின் அடிப்படையில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி, அவர்களது புகார் மனுக்களும் தேர்தல் கமிஷன் விசாரணைக்கு எடுத்தது.சுதந்திரமான அரசியல் சட்ட அமைப்பான, தேர்தல் கமிஷனுக்கு நீதித்துறை அதிகாரமும் வழங்கப்பட்டு உள்ளது.

இந்த விவகாரத்தில், நீதிமன்றத்துக்கு இணையாக விசாரணை நடத்த தேர்தல் கமிஷனுக்கு அதிகாரம் உள்ளது. எனவே எடப்பாடி பழனிசாமி வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

DINAMALAR
Dated: 02.02.2025

# தயார்!

- ஒரே தேர்தல் மசோதாவை நிறைவேற்ற பா.ஜ.,
- மக்கள் ஆதரவை திரட்ட நிர்வாகிகளுக்கு உத்தரவு
- வக்பு மசோதா வெற்றியால் அடுத்த அதிரடி

- நமது டில்லி நிருபர் -

**வக்பு சட்டத்திருத்த மசோதாவை வெற்றிகரமாக நிறைவேற்ற எல்லா ஏற்பாடுகளும் செய்து முடித்துவிட்ட நிலையில், அடுத்ததாக ஒரே நாடு, ஒரே தேர்தல் மசோதாவை பா.ஜ., கையில் எடுத்துள்ளது. இதன்படி, இம்மசோதா குறித்த விழிப்புணர்வு கூட்டங்களை அனைத்து மாநிலங்களிலும் இடைவிடாது நடத்தி, அதற்கான ஆதரவு தளத்தை வலுப்படுத்தும் வகையில், மக்கள் மத்தியில் ஒரு பொதுக் கருத்தை உருவாக்கும்படி, கட்சி நிர்வாகிகளுக்கு பா.ஜ.,மேலிடம் உத்தரவிட்டுள்ளது.**

லோக்சபா தேர்தலும் சட்டசபை தேர்தல்களும் வெவ்வேறு காலகட்டங்களில் நடப்பதால், அரசுக்கு நிர்வாக ரீதியாக சிக்கல்கள் ஏற்படுவதால், நாடு முழுதும் ஒரே நேரத்தில் லோக்சபாவுக்கும், சட்டசபைகளுக்கும், உள்ளாட்சி அமைப்புகளுக்கும் தேர்தல் நடத்த வேண்டுமென்பதில் பிரதமர் நரேந்திர மோடி உறுதி காட்டி வருகிறார்.

அவ்வாறு செய்தால், அரசுக்கு வீணாக நிதிச் செலவு ஏற்படுவது குறையும் என்றும் கூறி வருகிறார்.

இதற்காகவே, கடந்த டிசம்பரில் நடந்த குளிர் கால கூட்டத்தொடரில், ஒரே நாடு ஒரே தேர்தலுக்கான 129வது அரசியலமைப்பு சட்டத்திருத்த மசோதா, யூனியன் பிரதேசங்களின் சட்டத் திருத்த மசோதா என, இரண்டு மசோதாக்கள் லோக்சபாவில் அறிமுகப்படுத்தப்பட்டன.

## எதிர்ப்பு

எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு காரணமாக இந்த மசோதா உடனடியாக பார்லிமென்ட் கூட்டு குழு அமைக்கப்பட்டு, அங்கு ஆய்வுக்கு அனுப்பப்பட்டது.

இந்த குழுவில், பா.ஜ., உறுப்பினர்கள் தங்களது முழு ஆதரவை காட்டி வரும் அதே வேளையில், தே.ஜ., கூட்டணியில் உள்ள தெலுங்கு தேசம், ஐக்கிய ஜனதா தளம் மற்றும் சிவசேனா ஆகிய கட்சிகளும், ஒரே நாடு ஒரே தேர்தல் சட்ட மசோதாவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

இந்த மசோதாக்களின் அடிப்படையில் வைத்து பார்க்கும் பொழுது, சாத்தியமுள்ள மாநிலங்களுக்கும் சேர்த்து, வரும் 2029 லோக்சபா தேர்லுடன், அவற்றின் சட்டசபை தேர்தல்கள் நடத்திவிடலாம்; தவிர, 2030ல் நாடு முழுதும் ஒரே நேரத்தில் தேர்தல் என்பதை முழுவீச்சில் அமல்படுத்தி விடலாம் என, பா.ஜ., பெரும் நம்பிக்கையுடன் உள்ளது.

இதற்காக, இந்த மசோதாக்களை எக்காரணம் கொண்டும் கிடப்பில் போட்டு விடாமல், இடைவிடாது நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும், அக்கட்சியின் தலைவர்கள் உறுதியாக உள்ளனர்.

இந்த நிலையில்தான், இந்த ஒரே நாடு ஒரே தேர்தல் குறித்து மக்களிடம் தீவிரமாக எடுத்துச் சொல்ல வேண்டுமென்று பா.ஜ., மேலிடம் திட்டமிட்டுள்ளது. இதற்காக, பல்வேறு நடவடிக்கைகளையும், யோசனைகளையும் ஆராய்ந்து வரும் நிலையில், முதற்கட்டமாக பா.ஜ., மாநில நிர்வாகிகள் அனைவருக்கும், ஒரே நாடு ஒரே தேர்தல் அம்சங்கள் குறித்து விரிவாக விளக்கும் வகையிலான கூட்டங்கள் டில்லி பா.ஜ., தலைமை அலுவலகத்தில் முழு வீச்சில் நடந்து வருகின்றன.

இந்த கூட்டத்தில் பல்வேறு மாநிலங்களில் இருந்தும், பா.ஜ., நிர்வாகிகள் வரவழைக்கப்பட்டு, அவர்களுக்கு முக்கிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டும் வருகின்றன.

## நடவடிக்கை

இந்த நடவடிக்கைகளை தீவிரமாக செய்வதற்காகவே, மத்திய விவசாயத்துறை அமைச்சர் சிவ்ராஜ் சிங் சவுகான் மற்றும் பா.ஜ.,தேசிய பொதுச்செயலர் சுனில் பன்சால் ஆகியோர் தலைமையில், ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

இவர்கள் இருவரும், அனைத்து நிர்வாகிகளுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கி, களத்தில் என்ன மாதிரியான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்றும் உத்தரவிட்டு வருகின்றனர்.

ஏற்கனவே பெரும் எதிர்ப்பு இருந்து வந்த நிலையிலும், பார்லிமென்ட் கூட்டு குழு அமைக்கப்பட்டு, பல மாநிலங்களுக்கு சுற்றுப் பயணம் செய்தும், மக்களுடன் ஆலோசித்தும் ஆறு மாதங்களுக்குள், வக்பு சட்ட திருத்த மசோதாவின் இறுதி அறிக்கை தயார் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் ஓம் பிர்லாவிடம், அந்த அறிக்கை அளிக்கப்பட்டு, இந்த கூட்டத் தொடரிலேயே இரண்டு சபைகளிலும் வெற்றிகரமாக அந்த மசோதா நிறைவேற்றப் படவுள்ளது.

அதே பாணியில், ஒரே நாடு ஒரே தேர்தல் சட்ட மசோதாவையும் விரைவில் பணிகளை முடித்து, பார்லிமென்டில் நிறைவேற்றிட, மத்திய அரசு தரப்பில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன்படி, பார்லிமென்ட் கூட்டுக்குழு கூட்டங்கள் அடுத்தடுத்து நடத்தப்பட்டு, ஒரே நாடு ஒரே தேர்தல் சட்ட திருத்த மசோதாவின் இறுதி அறிக்கையை இந்த பட்ஜெட் கூட்டத் தொடரிலேயே வழங்குவதற்கும் தீவிர நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

## பொதுகருத்தை உருவாக்க சிவ்ராஜ் சிங் சவுகான் வலியுறுத்தல்

ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதா குறித்து, பா.ஜ., நிர்வாகிகளிடையே மத்திய விவசாய அமைச்சர் சிவ்ராஜ் சிங் சவுகான் பேசியதாவது:



சிவ்ராஜ் சிங்

ஒவ்வொரு மாநில பா.ஜ.,வும், பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வு கூட்டங்களை நடத்த வேண்டும். லோக்சபா மற்றும் சட்டசபைகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதால் ஏற்படக்கூடிய பயன்கள் குறித்து, விரிவாக விளக்க வேண்டும். இந்த மசோதாவின் அவசியம் குறித்தும், மக்களுக்கு எடுத்துச்சொல்லி அவர்கள் மத்தியில் ஒரு பொதுக்கருத்தை உருவாக்க வேண்டும்.

வக்பு சட்டத்திருத்த மசோதாவுக்கும்கூட, பல்வேறு மாநிலங்களில் பா.ஜ., நிர்வாகிகள் சார்பில் விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தப்பட்டு, தற்போது அதை வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளோம். அதை போலவே, இந்த மசோதாவுக்கும், ஆதரவு தளத்தை உருவாக்கும் வகையில், அனைத்து நடவடிக்கைகளிலும், அனைத்து மாநில நிர்வாகிகளும் ஈடுபட வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

DINAMALAR Dated: 02.02.2025

# தேர்தல் கமிஷனுக்கு நீதித்துறை அதிகாரம் உண்டு பழனிசாமி வழக்கில் வெளிவந்தது உண்மை

சென்னை, பிப். 2–

'சுதந்திரமான அரசியல் சட்ட அமைப்பான தேர்தல் கமிஷனுக்கு, நீதித்துறை அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளது' என, தலைமை தேர்தல் கமிஷன் சார்பில், சென்னை உயர் நீதிமன்றத்தில் பதில் அளிக்கப்பட்டு உள்ளது.

'அ.தி.மு.க., பொதுச் செயலராக பழனிசாமி தேர்ந்தெடுக்கப்பட்டதை அங்கீகரிக்கக் கூடாது; அ.தி.மு.க., விதிகளில் திருத்தம் செய்தது செல்லாது' என, அக்கட்சி முன்னாள் எம்.பி.,க்கள் கே.சி. பழனிசாமி, ரவீந்திரநாத், புகழேந்தி, வழக்கறிஞர் ராம்குமார் ஆதித்தன், சூரியமூர்த்தி உள்ளிட்டோர், தலைமை தேர்தல் கமிஷனுக்கு மனுக்கள் அனுப்பியிருந்தனர்.


இப்பொழுதே பின்தொடருங்கள்
தினமலர்
செய்திகளை
வாட்ஸ் ஆப்பில்!


## மனு தாக்கல்

அது தொடர்பாக, தேர்தல் கமிஷன் விசாரணை நடத்தி வருகிறது.

இந் நிலையில், கே.சி.பழனிசாமி உள்ளிட்டோரின் மனுக்களை, தேர்தல் கமிஷன் விசாரிக்க தடை கேட்டு, உயர் நீதிமன்றத்தில் அ.தி.மு.க., பொதுச்செயலர் பழனிசாமி மனு தாக்கல் செய்தார்.



பழனிசாமி

அதில் கூறப்பட்டு உள்ளதாவது:

நீதித் துறைக்கு இணையான விசாரணையை தேர்தல் கமிஷன் நடத்துகிறது. அரசியல் கட்சிகளின் உள்விவகாரத்தில் தேர்தல் கமிஷன் ஓரளவுதான் தலையிட முடியும்; எல்லா விவகாரத்திலும் தலையிட முடியாது.

## விசாரணை

மேலும், புகார் அளித்தவர்கள், அ.தி.மு.க.,வில் உறுப்பினர்களாக இல்லை. கட்சிக்கு சம்பந்தமே இல்லாதவர்களின் புகார்கள் மீது, தேர்தல் கமிஷன் விசாரணை நடத்த முடியாது.

கே.சி.பழனிசாமி உள்ளிட்டோர் கொடுத்த புகார்கள் குறித்து பதில் அளிக்குமாறு, கடந்தாண்டு டிசம்பர் 24ல் தேர்தல் கமிஷன் அனுப்பிய நோட்டீசை ரத்து செய்ய வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் ஆர்.சுப்பிரமணியன், சி.குமரப்பன்

தொடர்ச்சி 3ம் பக்கம்

## தேர்தல் கமிஷனுக்கு...

முதல் பக்கத் தொடர்ச்சி

அடங்கிய அமர்வு, அ.தி.மு.க., உட்கட்சி விவகாரம் தொடர்பாக, தேர்தல் கமிஷன் விசாரிக்க இடைக்கால தடை விதித்தது; தேர்தல் கமிஷன் பதிலளிக்கவும் உத்தரவிட்டிருந்தது.

அதன்படி, இந்திய தேர்தல் கமிஷன் சார்பில், தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தாக்கல் செய்துள்ள பதில் மனு:

அ.தி.மு.க., உட்கட்சி விவகாரம் தொடர்பாக, ஆறு புகார் மனுக்கள் அளிக்கப்பட்டன. அவற்றை ஒன்றாக பரிசீலித்து முடிவெடுக்கும் வகையில் நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. புகழேந்தி, ராம்குமார் ஆதித்தன் ஆகியோர் வழக்குகளில், டில்லி உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவு அடிப்படையில், அவர்களின் புகார்களும் சேர்த்து விசாரணைக்கு எடுக்கப்பட்டுள்ளன.

சுதந்திரமான, அரசியல் சட்ட அமைப்பான தேர்தல் கமிஷனுக்கு, நீதித் துறை அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. புகார்கள் குறித்து பதிலளிக்கும்படி தேர்தல் கமிஷன் நோட்டீஸ் அனுப்பியதன் வாயிலாக, எந்த அதிகார வரம்பு மீறலிலும் ஈடுபடவில்லை. எனவே, பழனிசாமியின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

விசாரணையை, நீதிபதிகள் ஆர்.சுப்பிரமணியன், சி,குமரப்பன் அடங்கிய அமர்வு, வரும் 6ம் தேதிக்கு தள்ளிவைத்துள்ளது.

DINAMANI

Dated: 02.02.2025

# தேர்தல் விதிமீறல்: சீமான் மீது வழக்குப் பதிவு

ஈரோடு, பிப். 1: ஈரோட்டில் தேர்தல் விதிகளை மீறியதாக சீமான் உள்பட நாம் தமிழர் கட்சியினர் மீது போலீஸார் சனிக்கிழமை வழக்குப் பதிவு செய்துள்ளனர்.



ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் வரும் 5-ஆம் தேதி நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் போட்டியிடும் நாம் தமிழர் கட்சியின் வேட்பாளரை ஆதரித்து அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் ஈரோட்டில் தொடர் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார். இதில் தேர்தல் விதிகளை மீறியதாகவும், அனுமதி பெறாமல் பிரசாரம் செய்ததாகவும் ஏற்கெனவே சீமான் மீது 5 வழக்குகளும், வேட்பாளர் மற்றும் கட்சி நிர்வாகிகள் மீது 11 வழக்குகளும் போலீஸார் பதிவு செய்துள்ளனர். இந்நிலையில், ஈரோடு மரப்பாலம் அருகே முனிசிபல் சத்திரம் பகுதியில் வெள்ளிக்கிழமை இரவு நாம் தமிழர் கட்சியினர் தெருமுனைக் கூட்டத்துக்கு அனுமதி பெற்றிருந்தனர். ஆனால் தேர்தல் விதிகளை மீறி மேடை அமைத்து பிரசாரத்தில் ஈடுபட்டனர்.

இதுகுறித்து பறக்கும் படை அதிகாரி ஜெகநாதன், ஈரோடு தெற்கு போலீஸில் அளித்த புகாரின்பேரில், நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், வேட்பாளர் மா.கி.சீதாலட்சுமி உள்ளிட்ட கட்சியினர் 7 பேர் மீது அரசு அதிகாரியை பணி செய்ய விடாமல் தடுத்தல், தேர்தல் விதிகளை மீறியது உள்ளிட்ட 4 பிரிவுகளின் கீழ் போலீஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

DINAMANI
Dated: 02.02.2025

# முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர் நவீன் சாவ்லா காலமானார்

புது தில்லி, பிப். 1: முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர் நவீன் சாவ்லா, தில்லி தனியார் மருத்துவமனையில் சனிக்கிழமை காலமானார். அவருக்கு வயது 79.



தேர்தல் ஆணையராக கடந்த 2005 முதல் 2009 வரையிலும் தலைமைத் தேர்தல் ஆணையராக 2009 ஏப்ரல் மாதம் முதல் 2010 ஜூலை மாதம் வரையிலும் பதவி வகித்தார். 2009-இல் அவர் தலைமையில் மக்களவைத் தேர்தல் நடைபெற்றபோது, பாரபட்சமாக அவர் நடந்து கொள்வதாக அப்போதைய எதிர்க்கட்சியான பாஜக குற்றம்சாட்டியது.

கடந்த 2009-இல் நவீன் சாவ்லாவை பதவிநீக்கம் செய்யுமாறு அப்போதைய தலைமைத் தேர்தல் ஆணையராக இருந்த என்.கோபாலசுவாமி மத்திய அரசுக்கு பரிந்துரைத்தார். எனினும் அந்தப் பரிந்துரை மீது அரசு நடவடிக்கை எடுக்கவில்லை.

நவீன் சாவ்லா பாரபட்சமாக நடந்து கொள்வதால் அவரை பதவிநீக்கம் செய்ய வேண்டும் என்று கோரி 2006-இல் அப்போதைய மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் அத்வானியும், 204 எம்.பி.க்களும் குடியரசுத் தலைவராக இருந்த அப்துல் கலாமிடம் கோரிக்கை மனு அளித்தனர். இந்த விவகாரம் தொடர்பாக பாஜக உச்ச நீதிமன்றத்தில் வழக்கும் தொடர்ந்தது.

2009 மக்களவைத் தேர்தலின்போது அவர் தலைமைத் தேர்தல் ஆணையராக பதவி வகித்தார்.

DINAKARAN

Dated: 02.02.2025

# ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல் பிரசாரம் நாளையுடன் ஓய்கிறது

## சீமான், சாட்டை துரைமுருகன், நாதக வேட்பாளர் மீது வழக்குப்பதிவு

ஈரோடு, பிப். 2: ஈரோடு இடைத்தேர்தல் பிரசாரம் நாளை மாலை 5 மணியுடன் நிறைவுபெற உள்ளது.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் வரும் 5ம் தேதி நடைபெற உள்ளது. இதில் திமுக வேட்பாளராக வி.சி.சந்திரகுமார், நாதக வேட்பாளராக சீதாலட்சுமி உட்பட 46 பேர் போட்டியில் உள்ளனர். திமுக வேட்பாளர் சந்திரகுமாரை ஆதரித்து அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில் எம்.பி.க்கள், எம்எல்ஏக்கள் தீவிர பிரசாரம் மேற்கொண்டு வருகின்றனர். மேலும் தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வபெருந்தகை, முன்னாள் மாநில தலைவர் திருநாவுக்கரசர், தங்கபாலு, மதிமுக சார்பில் முதன்மை செயலாளர் துரை வைகோ, இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் இரா.முத்தரசன் உள்ளிட்டோர் பிரசாரம் செய்தனர். நாதக வேட்பாளரை ஆதரித்து அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் மற்றும் நிர்வாகிகள் ஈரோட்டிலேயே முகாமிட்டு தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.



பிரசாரம் நாளை மாலை 5 மணியுடன் நிறைவு பெற உள்ளதையொட்டி, அரசியல் கட்சியினர் மற்றும் சுயேச்சை வேட்பாளர்கள் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தேர்தல் விதிகளை மீறியும், அனுமதி பெறாமல் பிரசாரம் செய்ததாகவும் ஏற்கனவே நாதக வேட்பாளர் சீதாலட்சுமி, ஒருங்கிணைப்பாளர் சீமான் உள்ளிட்டோர் மீது 11க்கும் மேற்பட்ட வழக்குகளை போலீசார் பதிவு செய்துள்ளனர். இந்நிலையில், ஈரோடு மரப்பாலம் அருகே முனிசிபல் சத்திரம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு நாதக தெருமுனை கூட்டத்திற்கு அனுமதி பெற்றிருந்தனர்.

ஆனால், பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்படுத்தும் வகையில் தேர்தல் விதிகளை மீறி மேடை அமைத்து பிரசாரத்தில் ஈடுபட்டனர். தேர்தல் பறக்கும் படை அதிகாரி ஜெகநாதன் அறிவுறுத்தியபோது அவரை பணி செய்ய விடாமல் தடுத்தனர். புகாரின்படி சீமான், வேட்பாளர் சீதாலட்சுமி, சாட்டை துரைமுருகன் உள்ளிட்ட கட்சியினர் 7 பேர் மீது அரசு அதிகாரியை பணி செய்ய விடாமல் தடுத்தல், தேர்தல் விதிகளை மீறியது உள்ளிட்ட 4 பிரிவுகளின் கீழ் போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

DINAKARAN

Dated: 02.02.2025

### அதிமுக உட்கட்சி விவகாரம் தொடர்பாக விசாரணை நடத்த

# எதிர்ப்பு தெரிவித்து இபிஎஸ் தொடர்ந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும்

## சென்னை உயர் நீதிமன்றத்தில் தேர்தல் ஆணையம் மனு

சென்னை, பிப். 2: அதிமுக உள்கட்சி விவகாரம் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்து அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி தாக்கல் செய்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று தேர்தல் ஆணையம் சென்னை உயர்நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

அதிமுக விதிகளில் திருத்தம் செய்தது, தலைமை மாற்றம் உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பாக அதிமுகவைச் சேர்ந்த சூரியமூர்த்தி, புகழேந்தி, ராம்குமார் ஆதித்தன், கே.சி. பழனிச்சாமி, ரவீந்திரநாத் உள்ளிட்ட ஆறு பேர் தேர்தல் ஆணையத்தில் புகார் செய்திருந்தனர்.

இந்த புகார்கள் குறித்து விசாரணை நடத்த தேர்தல் ஆணையத்துக்கு தடை விதிக்கக்கோரி அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குகளை தொடர்ந்திருந்தார். இந்த வழக்குகளை விசாரித்த உயர்நீதிமன்றம், தேர்தல் ஆணைய விசாரணைக்கு இடைக்கால தடை விதித்தும், தேர்தல் ஆணையம் பதிலளிக்கவும் உத்தரவிட்டிருந்தது. அதன்படி, எடப்பாடி பழனிச்சாமி தாக்கல் செய்த மனுக்களுக்கு பதில் அளித்து தேர்தல் ஆணையம் சார்பில் தமிழக தலைமை அதிகாரி அர்ச்சனா பட்நாயக் சென்னை உயர் நீதிமன்றத்தில் பதில் மனு தாக்கல் செய்துள்ளார்.

அந்த பதில் மனுவில், அதிமுக உள்கட்சி விவகாரம் தொடர்பாக 6 புகார் மனுக்கள் அளிக்கப்பட்டிருந்ததால் அவற்றை ஒன்றாக பரிசீலித்து முடிவெடுக்கும் வகையில் பதில் மனுக்களை தாக்கல் செய்யுமாறு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டது. புகழேந்தி மற்றும் ராம்குமார் ஆதித்தன் ஆகியோர் டெல்லி உயர் நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்குகளில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் அவர்களின் புகார்களும் சேர்த்து விசாரணைக்கு எடுக்கப்பட்டுள்ளது.

சுதந்திரமான அரசியல் சட்ட அமைப்பான தேர்தல் ஆணையத்திற்கு, நீதித்துறை அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளது. இந்த வழக்கை தொடர்ந்துள்ள அதிமுக, முழு பின்னணி விவரங்களை தெரிவிக்காமல், யூகத்தின் அடிப்படையில், முன்கூட்டியே தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு விசாரணைக்கு உகந்தது அல்ல.

புகார்கள் குறித்து பதிலளிக்குமாறு உத்தரவு பிறப்பித்தன் மூலம் எந்த அதிகார வரம்பு மீறலிலும் தேர்தல் ஆணையம் ஈடுபடவில்லை என்பது தெளிவாகிறது. எனவே, எடப்பாடி பழனிச்சாமியின் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நீதிபதிகள் ஆர்.சுப்பிரமணியன் மற்றும் சி.குமரப்பன் அடங்கிய அமர்வு, பிப்ரவரி 6ம் தேதிக்கு தள்ளி வைத்துள்ளது.

DINAKARAN

Dated: 02.02.2025

# முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர் நவீன் சாவ்லா மறைவு

புதுடெல்லி, பிப்.2: முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர் நவீன் சாவ்லா(79)டெல்லி தனியார் மருத்துவமனையில் நேற்று காலமானார். 2005ம் ஆண்டு முதல் 2009ம் ஆண்டு வரை தேர்தல் ஆணையராகவும் பின்னர் 2009ம் ஆண்டு ஏப்ரல் முதல் ஜூலை 2010ம் ஆண்டு வரை தலைமை தேர்தல் ஆணையராகவும் இருந்தார். நவீன் சாவ்லா மூன்றாம் பாலின வாக்காளர்களுக்கான முக்கிய சீர்திருத்தத்தை அறிமுகம் செய்தவர்.



முதல்வர் இரங்கல்: முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், "முன்னாள் தலைமை தேர்தல் ஆணையர் நவீன் .சாவ்லா மறைவு செய்தி அறிந்து மிகுந்த வருத்தமுற்றேன். தேர்தல் முறையை வலுப்படுத்துவதில் அவரது பதவிக்காலம் குறிப்பிடத்தக்க பங்களிப்பை கண்டது. அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன்" என கூறியுள்ளார்.

THE HINDU - ENGLISH

Dated: 03.02.2025

# Opinion poll predicts win for DMK in bypoll

**The Hindu Bureau**
CHENNAI

An opinion poll conducted by People Studies has predicted victory for the DMK in the byelection to the Erode (East) Assembly constituency, scheduled for February 5.

டெல்லியில் வசந்த பஞ்சமியுடன் காலநிலை மாறுகிறது. 3 நாட்களுக்கு பிறகு (பிப்ரவரி 5) டெல்லியில் வளர்ச்சியின் புதிய வசந்தம் தொடங்கும். ஏனெனில் இந்த முறை டெல்லியில் பா.ஜனதா அரசு அமைக்கும். தங்கள் மீது மக்கள் எந்த அளவுக்கு கோபமும், வெறுப்பும் கொண்டிருக்கிறார்கள் என்பதை ஆம் ஆத்மியினர் அறிந்து வைத்துள்ளனர். எனவே தற்போது பொய்களை பரப்பி வருகிறார்கள். இதனால் அந்த கட்சி மக்கள் முன்னால் அம்பலமாகி இருக்கிறது. ஆனாலும் மீண்டும் மீண்டும் அதே பொய் வாக்குறுதிகளை வைத்து வாக்கு கேட்டு வருகின்றனர். ஆனால் டெல்லி மக்கள் இனியும் இந்த பொய் வாக்குறுதிகளுக்கு பலியாக மாட்டார்கள்.

### பா.ஜனதா ஆட்சி அமைக்கும்

அவர்கள் கூறுவது போல டெல்லியில் பா.ஜனதா ஆட்சிக்கு வந்தால் எந்த குடிசையும் இடிக்கப்படாது, எந்த வளர்ச்சித்திட்டமும் நிறுத்தப்படாது.

டெல்லியில் தவறி கூட ஆம் ஆத்மி அரசு வரக்கூடாது. ஏனெனில் அது மேலும் 5 ஆண்டுகளை அழிக்கக்கூடும். ஏழையோ, நடுத்தர பிரிவினரோ, அனைவரின் வாழ்க்கையும் வளமாக இருக்க வேண்டும்.

டெல்லியில் பிப்ரவரி 8-ந் தேதி பா.ஜனதா அரசு அமைக்கும். இதை நீங்கள் எழுதி வைத்துக்கொள்ளுங்கள். சர்வதேச மகளிர் தினமான மார்ச் 8-ந் தேதிக்குள் மாநிலத்தில் பெண்கள் தங்கள் வங்கிக்கணக்குகளில் ரூ.2,500 பெற்று இருப்பார்கள். டெல்லிக்கு இரட்டை எஞ்சின் அரசு கிடைக்கும். போராடுவதற்கு பதிலாக, மக்களின் நலனுக்காக பாடுபட்டு, அவர்களின் கனவுகள் நனவாவதை உறுதி செய்யும்.

இவ்வாறு பிரதமர் மோடி கூறினார்.

இதைப்போல ராஜேந்திர நகரில் ராணுவ மந்திரி ராஜ்நாத்சிங் பிரசாரம் மேற்கொண்டார்.

### கெஜ்ரிவால் வீடியோ வெளியீடு

முன்னதாக ஆம் ஆத்மி தலைமை ஒருங்கிணைப்பாளர் கெஜ்ரிவால், டெல்லி வாக்காளர்களுக்கு வீடியோ மூலம் வேண்டுகோள் விடுத்தார். அதில் அவர் கூறியிருந்ததாவது:-

வீட்டு வேலை செய்வோரின் குடியிருப்புகள், சலவை தொழிலாளர் கூடங்கள், குடிசைப்பகுதிகள் என எல்லா இடங்களில் இருந்தும் போன் அழைப்புகள் வருகின்றன. அதாவது எதிர்க்கட்சியை சேர்ந்தவர்கள் அவர்களை அணுகி ரூ.3 ஆயிரம் கொடுப்பதாகவும், தேர்தல் கமிஷன் அதிகாரிகள் அவர்கள் வீட்டுக்கே வந்து ஓட்டை பெற்று, உங்கள் கைவிரலில் அழியாத மை வைப்பார்கள் என்று கூறுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். இது எனக்கு மிகப்பெரும் வியப்பையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தி இருக்கிறது. தேர்தல் நாளில் நீங்கள் ஓட்டுப்போடாமல் தடுப்பதற்காக இந்த மிகப்பெரிய சதிச்செயலில் ஈடுபட்டுள்ளார்கள்.

பணத்துக்காக தெரியாமல் கூட இந்த பொறியில் சிக்கி விடாதீர்கள். அப்படி உங்களுக்கு பணம் கொடுத்தால் வாங்குங்கள். ஆனால் விரலில் மை வைக்க அனுமதிக்காதீர்கள். இது வாழ்நாள் முழுக்க பிரச்சினையாக மாறி விடும்.

இவ்வாறு கெஜ்ரிவால் எச்சரிக்கை விடுத்தார்.

### பிரியங்கா சாடல்

மாநில முதல்-மந்திரியும், ஆம் ஆத்மி மூத்த தலைவருமான அதிஷியும் நேற்று பல்வேறு இடங்களில் பிரசாரம் மற்றும் பேரணியில் கலந்து கொண்டார்.

இதைப்போல காங்கிரஸ் பொதுச்செயலாளர் பிரியங்கா சீமாபுரியில் பிரசாரம் செய்தார். அப்போது அவர், பிரதமர் மோடியும், கெஜ்ரிவாலும் பெரும் தொழிலதிபர்களின் அடிமைகள் என சாடினார். ஜனாதிபதி குறித்து சோனியா கூறிய கருத்துகளை தேர்தல் பிரச்சினையாக மாற்றுவதாக பிரதமர் மோடியை குறை கூறிய பிரியங்கா, இதன் மூலம் விலைவாசி, வேலையில்லா திண்டாட்டம் உள்ளிட்ட பிரச்சினைகளால் அவதிப்படும் மக்களை இழிவுபடுத்தியதாக குற்றம் சாட்டினார்.

அனைத்து பொருட்களுக்கும் ஜி.எஸ்.டி. விதித்து இருப்பதால் விலைவாசி அதிகரித்து இருப்பதாக கூறிய பிரியங்கா, மத்திய பட்ஜெட்டில் விலைவாசி குறித்து ஒரு வார்த்தை கூட இடம்பெறவில்லை என்றும் குறைகூறினார்.

### ஈரோட்டிலும் நிறைவு

இதேபோல் 5-ந்தேதி இடைத்தேர்தல் நடைபெற உள்ள ஈரோடு கிழக்கு தொகுதியிலும் இன்று (திங்கட்கிழமை) மாலையுடன் பிரசாரம் ஓய்கிறது.

அங்கு போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் சந்திரகுமார், நாம் தமிழர் கட்சி வேட்பாளர் சீதாலட்சுமி மற்றும் சுயேச்சை வேட்பாளர்கள் இறுதிக்கட்ட வாக்குசேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார்கள்.

DAILY THANTHI
Dated: 03.02.2025

### தேர்தல் கமிஷனால்

# நியாயமான தேர்தல்கள் நடத்தப்படுவதை கண்காணிக்க குழு

## காங்கிரஸ் கட்சி அமைத்தது

புதுடெல்லி, பிப்.3-

மராட்டிய மாநிலத்தில் கடந்த ஆண்டு இறுதியில் நடைபெற்ற சட்டசபை தேர்தலில் பா.ஜனதா கூட்டணி வெற்றிப் பெற்றது. காங்கிரஸ் கூட்டணி தோல்வியை சந்தித்தது.

இதையடுத்து, தேர்தலின்போது வாக்களர் பட்டியலில் பெரிய அளவில் மோசடி நடைபெற்றதாக காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டின. இது தொடர்பாக தேர்தல் கமிஷனிலும் அக்கட்சிகள் புகார் அளித்தன. ஆனால் வாக்காளர் பட்டியலில் எந்த மோசடியும் நடைபெறவில்லை என தேர்தல் கமிஷன் விளக்கமளித்தது.

இந்த நிலையில் தேர்தல் கமிஷனால் சுதந்திரமாகவும் நியாயமாகவும் தேர்தல்கள் நடத்தப்படுவதை கண்காணிக்க, காங்கிரஸ் 8 பேர் கொண்ட குழுவை அமைத்துள்ளது.

'தலைவர்கள் மற்றும் நிபுணர்களின் அதிகாரமளிக்கப்பட்ட செயல் குழு' என்கிற அந்த குழுவை கட்சியின் தேசிய தலைவர் மல்லிகார்ஜுன கார்கே நேற்று அமைத்தார். அந்த குழுவில் காங்கிரஸ் பொருளாளர் அஜய் மக்கான் மற்றும் மூத்த தலைவர்கள் திக்விஜய சிங், அபிஷேக் சிங்வி, பிரவீன் சக்ரவர்த்தி, பவன் கேரா, குர்தீப் சிங் சப்பல், நிதின் ரவுத் மற்றும் சல்லா வம்ஷி சந்த் ரெட்டி ஆகியோர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக காங்கிரஸ் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், "இந்த குழு முதலில் மராட்டிய வாக்காளர் பட்டியல் மோசடி பிரச்சினையை எடுத்துக்கொண்டு, விரிவான அறிக்கையை விரைவில் தலைமைக்கு சமர்ப்பிக்கும்.

மராட்டியம் தவிர, இந்த குழு மற்ற மாநிலங்களின் கடந்த காலத் தேர்தல்களையும் பகுப்பாய்வு செய்யும். வரவிருக்கும் தேர்தல்கள் மற்றும் நாட்டில் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களை நடத்துவது தொடர்பான அனைத்து பிற பிரச்சினைகளையும் முன்கூட்டியே கண்காணிக்கும்" என கூறப்பட்டுள்ளது.

டெல்லியில் நாளை மறுநாள் (புதன்கிழமை) சட்டசபை தேர்தல் நடக்க இருக்கும் நிலையில் காங்கிரஸ் இந்த குழுவை அமைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

DAILY THANTHI

Dated: 03. 02. 2025

ஆம் ஆத்மி கட்சியினர் மீது தாக்குதல்:

# தேர்தல் கமிஷனுக்கு கெஜ்ரிவால் கடிதம்

புதுடெல்லி, பிப்.3-

டெல்லியில் நாளை மறுநாள் (புதன்கிழமை) சட்டசபை தேர்தல் நடைபெறகிறது. இந்த தேர்தலில் ஆம் ஆத்மி, பா.ஜனதா மற்றும் காங்கிரஸ் இடையே மும்முனை போட்டி நிலவுகிறது. தேர்தலையொட்டி அரசியல் கட்சிகள் அனைத்தும் இறுதிக்கட்ட பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளரும், டெல்லி முன்னாள் முதல்-மந்திரியுமான அரவிந்த் கெஜ்ரிவால் புதுடெல்லி தொகுதியில் போட்டியிடுகிறார். அங்கு அவருக்கு ஆதரவாக வாக்கு சேகரிப்பில் ஈடுபடும் ஆம் ஆத்மி கட்சியினர் மீது பா.ஜனதாவினர் அடிக்கடி தாக்குதல் நடத்துவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

நேற்று முன்தினம் அங்கு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்ட ஆம் ஆத்மி எம்.எல்.ஏ. மொஹிந்தர் கோயல் மீது பா.ஜனதாவினர் தாக்குதல் நடத்தியதாக கூறப்படுகிறது. இந்த நிலையில் இந்த விவகாரம் தொடர்பாக தேர்தல் கமிஷனுக்கு கெஜ்ரிவால் கடிதம் எழுதியுள்ளார். அதில் அவர், ஆம் ஆத்மி கட்சியினர் மீது தாக்குதல்களை நடத்திய பா.ஜனதா தொண்டர்களைக் கைது செய்ய வேண்டும் எனவும், அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்காத போலீஸ் அதிகாரிகளை பணியிடைநீக்கம் செய்ய வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் தான் போட்டியிடும் புதுடெல்லி தொகுதியில் சுதந்திரமான தேர்தல் பார்வையாளர்களை நியமிக்க வேண்டும் என தேர்தல் கமிஷனிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

DINAMALAR Dated: 03.02.2025

# உளவுத்துறை தகவலால் அதிர்ச்சி ஈரோட்டில் கடைசி நேர 'கவனிப்பு'

– நமது நிருபர் –

ஈரோடு கிழக்கு சட்டசபை தொகுதி இடைத்தேர்தலில், பிரதான எதிர்க்கட்சிகள் போட்டியிடாததால், பிரசாரத்தில் கூட அலட்சியம் காட்டிய தி.மு.க., 'கவனிப்பு'களை குறைத்த நிலையில், நாம் தமிழர் கட்சி காட்டிய பிரசார வேகத்தைக் கண்டு மிரண்டு, தொகுதி மக்களை, கடைசி நேர கவனிப்புக்கு உட்படுத்த, கட்சியினரை முழு வேகத்தில் களம் இறக்கியதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

## புறக்கணிப்பு

காங்., எம்.எல்.ஏ., இளங்கோவன் மறைவைத் தொடர்ந்து, ஈரோடு கிழக்கு தொகுதிக்கு, நாளை மறுதினம் இடைத்தேர்தல் நடக்க உள்ளது. கடந்த முறை காங்., கட்சிக்காக, தி.மு.க.,வே பிரசாரத்தை முன்னெடுத்ததோடு, அதிக ஓட்டு வித்தியாசத்தில் வெற்றி பெற வைப்பதற்காக, மக்களை பட்டியில் அடைத்து கவனிப்பு செய்வது முதல், கடைசி நேர கவனிப்பு வரை, அனைத்து விஷயங்களையும் செய்தது.

தேர்தல் பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட அமைச்சர் செந்தில் பாலாஜி, களத்தில் இருந்து அனைத்தையும் கவனித்துக் கொண்டார்.

இதற்காக தி.மு.க., தரப்பில், 80 கோடி ரூபாய் வரை செலவு செய்யப்பட்டதாக கணக்கு சொல்லப்பட்டது. இம்முறை காங்கிரசுக்கு தொகுதியை விட்டுக்கொடுக்க மனமில்லாத தி.மு.க., தலைமை, தி.மு.க., சார்பில் சந்திரகுமாரை வேட்பாளராக அறிவித்தது.

ஆளுங்கட்சியைச் சேர்ந்த ஒருவர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டதால், அக்கட்சிக்கே எப்படியும் வெற்றி கிட்டும்; நாம் ஏன் தேர்தலில் போட்டியிட்டு, பணத்தையும் செலவு செய்து, தோல்வியை எதிர்கொள்ள வேண்டும் என நினைத்த அ.தி.மு.க., – பா.ஜ., உள்ளிட்ட கட்சிகள் தேர்தலை புறக்கணிப்பதாக அறிவித்தன.

## தீவிர தேர்தல் பிரசாரம்

இதனால், எளிதாக வெற்றி கிடைத்துவிடும் என நினைத்த தி.மு.க., லோக்கல் அமைச்சரான முத்துசாமியை மட்டும் பிரசாரத்துக்கு அனுப்பியது. தொகுதியை பெரிய அளவில் கண்டு கொள்ளாமல் விட்டது.

இதனால், தி.மு.க., தேர்தல் பிரசாரத்தில் சுணக்கம் காணப்பட்டது. இதை வாய்ப்பாக பயன்படுத்திக் கொண்ட நாம் தமிழர் கட்சி தலைவர் சீமான், ஒரு வாரத்துக்கு மேலாக, தொகுதியில் தங்கி இருந்து, தீவிர தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டார்.

கூட்டம் அலைமோதவில்லை என்றாலும், சீமான் சொல்வதை கேட்க கணிசமான இளைஞர்கள் வருகின்றனர்.

தொகுதி நிலவரம் குறித்து, உளவுத்துறை வாயிலாக கடைசி நேரத்தில் கருத்துக் கணிப்பு மேற்கொள்ளப்பட்டது.

அதில், 'தன் கட்சிக்கான ஓட்டு தவிர, அ.தி.மு.க., மற்றும் பா.ஜ., ஓட்டுகளின் பெரும் பகுதியை, நாம் தமிழர் கட்சி வேட்பாளர் சீதாலட்சுமி பெறக்கூடிய வாய்ப்பு உள்ளது' என தி.மு.க., மேலிடத்துக்கு அறிக்கை கொடுக்கப்பட்டது.

இது, தி.மு.க., தலைமைக்கு பதற்றத்தை ஏற்படுத்தியது. கடந்த முறை இளங்கோவன் பெற்ற ஓட்டுகளை விடக் குறைவாக பெற்றாலே, அது நாம் தமிழர் கட்சி கொண்டாட்டத்துக்கு வாய்ப்பளித்தது போல ஆவதோடு, நான்காண்டு கால தி.மு.க., ஆட்சிக்கு எதிராக, மக்கள் ஓட்டளித்து விட்டனர் என்ற தோற்றத்தையும் ஏற்படுத்தும்; அவ்வாறு நடந்தால், அடுத்த ஆண்டு நடக்கவிருக்கும் சட்டசபை தேர்தலில், தி.மு.க.,வுக்கு தாக்கத்தை ஏற்படுத்தும். கூட்டணி கட்சிகள் தி.மு.க.,வில் இருந்து வெளியேறும் மன நிலைக்கு வரும்.

இதையெல்லாம் பிரசார காலத்தின் இறுதிக்கட்டத்தில் உணர்ந்து, தி.மு.க., தன் நிலைப்பாடை மாற்றிக் கொண்டு மக்களை கவனிக்க முடிவெடுத்து உள்ளது. அதற்கான காரியங்களில் நிர்வாகிகள் வேகமாக இறங்கினர்.

பிரதான கட்சிகள் ஒதுங்கியதால், ஊக்க பரிசு கிடைக்காது என ஏமாற்றத்தில் இருந்த ஈரோடு வாக்காளர்களுக்கு, இன்று காலை முதலே இன்ப அதிர்ச்சி கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன.

இதனால், கடந்த முறை நடந்த தேர்தலில் பதிவான ஓட்டுகளுக்கு குறைவில்லாமல், இம்முறையும் ஓட்டுப்பதிவு இருக்கும் என தி.மு.க., எதிர்பார்க்கிறது.

DINAMALAR
Dated: 03.02.2025

# முடிகிறது

- டில்லி சட்டசபை தேர்தல் பிரசாரம் இன்று மாலை...
- தலைநகரை கைப்பற்ற மோடி தீவிர ஓட்டு வேட்டை

புதுடில்லி, பிப். 3–

**பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள டில்லி சட்டசபை தேர்தல் பிரசாரம் இன்று மாலையுடன் ஓய்கிறது. டில்லியில் பா.ஜ.,வை ஆட்சி கட்டிலில் அமர்த்தும் நோக்கில், பிரதமர் மோடி நேற்று தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டார்.**



டில்லியில் நேற்று நடந்த சட்டசபை தேர்தல் பிரசார கூட்டத்தில் பங்கேற்ற பிரதமர் மோடி, பொதுமக்களை பார்த்து கையசைத்தார்.

டில்லியில் முதல்வர் ஆதிஷி தலைமையிலான ஆம் ஆத்மி ஆட்சி நடக்கிறது. இங்கு, நாளை மறுதினம் ஒரே கட்டமாக தேர்தல் நடக்க உள்ளது. மொத்தம் 70 தொகுதிகள் உள்ளன.

இந்த சட்டசபை தேர்தலில் ஆம் ஆத்மியும், காங்கிரசும் அனைத்து தொகுதிகளிலும் போட்டியிடுகின்றன. முக்கிய எதிர்க்கட்சியான பா.ஜ., 68 தொகுதிகளில் போட்டியிடுகிறது.

## 699 வேட்பாளர்கள்

அதன் கூட்டணி கட்சிகளான ஐக்கிய ஜனதா தளம் மற்றும் லோக்தந்திரிக் ஜனசக்தி கட்சிகள் தலா ஒரு தொகுதியில் போட்டியிடுகின்றன. இந்த தேர்தலில், 96 பெண்கள் உட்பட 699 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

ஆம் ஆத்மி தொடர்ச்சியாக மூன்றாவது முறையாக ஆட்சி அமைப்பதற்காக, அந்த கட்சியின் மூத்த தலைவர்கள் அரவிந்த் கெஜ்ரிவால், மணீஷ் சிசோடியா, ஆதிஷி ஆகியோர் தீவிர பிரசாரம் செய்து வருகின்றனர்.

பா.ஜ.,வை பொறுத்தவரையில் மாநிலத்தில் ஆட்சியை பிடிக்க வேண்டும் என்பதில் அக்கட்சியின் தேசிய தலைமை முதல், மாநில நிர்வாகிகள் வரை குறிக்கோளாக கொண்டு களமிறங்கியுள்ளனர்.

பா.ஜ., வேட்பாளர்களை ஆதரித்து பிரதமர் நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா, நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் நிதின் கட்கரி, கட்சியின் தேசிய தலைவர் நட்டா உள்ளிட்டோர் தீவிர பிரசாரம் மேற்கொண்டனர்.

பா.ஜ., ஆளும் மாநிலங்களின் முதல்வர்கள் யோகி ஆதித்யநாத், புஷ்கர் சிங் தாமி, தேவேந்திர பட்னவிஸ் உள்ளிட்டோரும் தேர்தல் பிரசாரம் செய்தனர்.

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்கள் ராகுல், பிரியங்கா, தேசிய தலைவர் மல்லிகார்ஜுன கார்கே உள்ளிட்டோர், தங்கள் வேட்பாளர்களை ஆதரித்து தீவிர பிரசாரம் மேற்கொண்டனர்.

'மகளிருக்கு மாதம் 2,500 ரூபாய் உதவித் தொகை, மெட்ரோ ரயிலில் மாணவர்களுக்கு இலவசம்' என, பல்வேறு இலவச அறிவிப்புகளால் வாக்காளர்களை அனைத்து கட்சிகளுமே திக்குமுக்காடச் செய்துவிட்டதாக அரசியல் பார்வையாளர்கள் கருதுகின்றனர்.

இந்நிலையில், இன்று மாலையுடன் பிரசாரம் ஓய்கிறது. இதை முன்னிட்டு, வேட்பாளர்களை ஆதரித்து அரசியல் தலைவர்கள் இறுதிக்கட்ட பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்று நடந்த தேர்தல் பிரசார கூட்டத்தில் பிரதமர் மோடி பேசியதாவது:

மத்திய பட்ஜெட்டில், 12 லட்சம் ரூபாய் வரை ஆண்டு வருமானம் உள்ளவர்களுக்கு வருமான வரி கிடையாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## சம்பள கமிஷன்

இந்த அறிவிப்பு, நடுத்தர வருவாய் பிரிவினருக்கு பெரும் மகிழ்ச்சியை அளித்துள்ளது. இதைத் தவிர பட்ஜெட்டில் உள்ள அறிவிப்புகள், நாடு முழுதும் உள்ள அனைத்து குடும்பங்களிலும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

அடுத்ததாக எட்டாவது சம்பளக் கமிஷன் வரப் போகிறது. ஓய்வூதிய முறைகளில் மாற்றம் செய்யப்பட உள்ளது. இவ்வாறு, அனைத்து மக்களின் நலனை மனதில் கொண்டே மத்திய பட்ஜெட் மற்றும் அரசின் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

இந்த பட்ஜெட்டுடன் முந்தைய காங்கிரஸ் ஆட்சிகளை ஒப்பிட்டு பாருங்கள். இதுவே நேருவின் ஆட்சியாக இருந்தால், 12 லட்சம் ரூபாயில், 25 சதவீதம் வரியாக சென்றிருக்கும். இந்திரா ஆட்சியாக இருந்தால், 10 லட்சம் ரூபாய் வரியாக போயிருக்கும். அதுவே, 12 ஆண்டுகளுக்கு முன் காங்கிரஸ் ஆட்சியாக இருந்திருந்தால், 2.60 லட்சம் ரூபாய் வரியாக செலுத்த வேண்டியிருக்கும்.

தற்போது 12 லட்சம் ரூபாய் வரைக்கும், 1 ரூபாய் கூட வரி செலுத்த தேவையில்லை.

டில்லியில் உள்ள ஆம் ஆத்மியின் பேரழிவு ஆட்சியால் மக்கள் விரக்தியில் உள்ளனர். அந்தக் கட்சியில் இருந்து பலர் தொடர்ந்து வெளியேறி வருகின்றனர். வசந்த பஞ்சமியை வரவேற்கும் வகையில், டில்லிக்கும் வசந்தம் வரப்போகிறது.

இந்த தேர்தலில், பா.ஜ.,வின் ஆட்சி அமைய உள்ளது தெளிவாகத் தெரிகிறது. மத்தியிலும், டில்லியிலும், பா.ஜ.,வின் இரட்டை இன்ஜின் ஆட்சி அமைவது உறுதி.

இவ்வாறு அவர் பேசினார்.

## ஈரோட்டிலும் இன்று நிறைவு

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் பிரசாரம் இன்று மாலையுடன் ஓயும் நிலையில், ஓட்டுச்சாவடிகள் தயார் நிலையில் உள்ளதை அதிகாரிகள் உறுதி செய்து வருகின்றனர்.

ஈரோடு கிழக்கு தொகுதியில் நடைபெறும் இடைத்தேர்தலிலும், நாளை மறுதினம் ஓட்டுப்பதிவு நடக்கிறது. இந்த தேர்தலில், 46 வேட்பாளர்கள் போட்டியில் உள்ள நிலையில், இன்று மாலை 6:00 மணியுடன் பிரசாரம் நிறைவடைகிறது.

இன்று மதியம் 3:00 மணிக்கு மேல், நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், கிருஷ்ணா தியேட்டர் அருகே வாகன பிரசாரத்தில் பேசி, பிரசாரத்தை நிறைவு செய்ய உள்ளார். தி.மு.க.,வினர் பிரசார நிறைவு இடம் அறிவிக்கவில்லை.

இருப்பினும், வழக்கமாக ஈரோடு பி.எஸ். பார்க்கில் நிறைவு செய்வது வழக்கம். அவ்விடத்தில் அனுமதி கோரியதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

அதேநேரம், இத்தொகுதியில் வாக்காளர்களாக, பொதுமக்களாக உள்ளவர்கள் நீங்கலாக, பிற மாவட்டத்தினர் மாலை, 6:00 மணிக்குள் வெளியேற வேண்டும் என, தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. அதன்பின், ஓட்டுப்பதிவு முடியும் வரை உள்ளூர் நிர்வாகிகள், தேர்தல் பணிகளை கவனிக்க உள்ளனர்.

ஏற்கனவே, பெரிய கட்சிகளுடன் போட்டி இல்லாததால், அமைதியாகவே காணப்பட்ட தேர்தல் பிரசாரம் நிறைவு பெறுவதால், போலீசாரும் நிம்மதி அடைகின்றனர். அத்துடன், ஓட்டுச்சாவடிகள் தயார் நிலையில் உள்ளதை அதிகாரிகள் உறுதி செய்து வருகின்றனர்.

DINAMALAR
Dated: 03.02.2025

# ஈரோட்டில் நா.த.க., - த.பெ.தி.க.,வினர் மோதல்

## வேட்பாளர் உட்பட 51 பேர் மீது வழக்கு

ஈரோடு, பிப். 3–

ஈரோட்டில் சர்ச் முன், நா.த.க., மற்றும் த.பெ.தி.க.,வினர் இடையே ஏற்பட்ட மோதலால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. நா.த.க., வேட்பாளர் உள்ளிட்ட, 51 பேர் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் பிரசாரம் இன்று மாலை 6:00 மணியுடன் ஓய உள்ள நிலையில், அரசியல் கட்சி வேட்பாளர்கள் மட்டுமின்றி சுயேச்சைகளும் தீவிர ஓட்டு சேகரிப்பில் நேற்று ஈடுபட்டனர்.

நாம் தமிழர் கட்சி வேட்பாளர் சீதாலட்சுமி தலைமையில் அக்கட்சியினர், ஈரோடு ப.செ.பார்க் சி.எஸ்.ஐ., பிரப் சர்ச் முன் நின்று கிறிஸ்துவர்களிடம் நேற்று காலை 11:00 மணியளவில் ஓட்டு சேகரித்தனர்.

அப்போது, ஈ.வெ.ரா., குறித்து பேசிய சீமானை கண்டிக்கும் விதமாக, சர்ச் முன், தந்தை பெரியார் திராவிடர் கழகத்தினர், சீமான் போட்டோவை ஒருபுறம், நா.த.க., போலவும், மறுபுறம் பா.ஜ.,வின் காவி உடையை அணிந்து இருப்பது போலவும் கார்ட்டூன் போட்டோ அச்சிடப்பட்ட துண்டு பிரசுரங்களை வினியோகித்தனர்.

இதனால் ஆத்திரமடைந்த, நா.த.க.,வினர் துண்டு பிரசுரங்களை பிடுங்கி கிழித்தெறிந்தனர். பின், த.பெ.தி.க.,வினரை, நா.த.க.,வினர் தாக்க முற்பட்டனர்.

போலீசார் தலையிட்டு இருதரப்பினரையும் அழைத்து சென்றனர்.

பின்னர் நா.த.க.,வினர் மீண்டும் சர்ச் முன் ஓட்டு சேகரிப்பில் ஈடுபட்டதோடு, ஈ.வெ.ரா.,வை கண்டித்து கோஷங்களை எழுப்பினர்.

இதற்கிடையில், 'தேர்தல் விதிமுறை மீறி, அரசு பணியை செய்ய விடாமல் செய்ததோடு, தான் தடுத்தும் சர்ச்சுக்குள் சென்று கட்சி சின்னத்துடன் தேர்தல் பிரசாரம் செய்ததாகவும், துண்டு பிரசுரங்களை அளித்து ஓட்டு சேகரித்தும், முறையாக அனுமதி பெறாமலும், கலகம் ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில், நாம் தமிழர் கட்சி வேட்பாளர் சீதாலட்சுமி உள்ளிட்ட, 51 பேர் ஓட்டு சேகரித்ததாக பறக்கும்படை அதிகாரி தினகரன், ஈரோடு டவுன் போலீசில் புகார் அளித்தார்.

அதன்படி மூன்று பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

நாம் தமிழர் கட்சியினர் தாக்கியதில் காயமடைந்ததாக கூறி, த.பெ.தி.க.,வைச் சேர்ந்த ஜபருல்லா, 45. சந்திரன், 34, ரஞ்சித் குமார், 41, ஆகியோர் ஈரோடு அரசு மருத்துவமனையில் உள் நோயாளிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

### கலவரத்தை துாண்டும் பேச்சு!

நாம் தமிழர் கட்சி சீமான், ஈரோட்டில் நடந்த கூட்டங்களில் வன்முறையை துாண்டும் வகையில் வெறித்தனமாக பேசி வந்தார். ஒரு கட்டத்தில் ஈ.வெ.ரா., தொண்டர்கள், இயக்கத்தினர் மீது வெடிகுண்டை வீசுவோம், என கூறினார். இந்நிலையில், நேற்று கலவரத்தை துாண்டும் வகையில் தாக்குதல் நடத்தி உள்ளனர். வெடிகுண்டை வீசுவோம் என கூறிய போதே, தேர்தல் ஆணையம் வேடிக்கை பார்க்காமல், நடவடிக்கை எடுத்திருந்தால் பிரச்னை பெரிதாகி இருக்காது.

கு.ராமகிருஷ்ணன்,
பொதுச்செயலர், த.பெ.தி.கழகம்

DINAMALAR

Dated: 02.02.2025

# இடைத்தேர்தலில் ஒதுங்கிய கூட்டணி கட்சிகள் பிரசாரத்தில் பங்கேற்பதை தவிர்த்த நிர்வாகிகள்

**ஈரோடு, பிப். 2–**

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில், தி.மு.க., கூட்டணியில் உள்ள பெரும்பாலான கட்சி தலைவர்கள், நிர்வாகிகள் கூட ஒதுங்கியதுடன், பிரசாரத்தில் பங்கேற்பதையும் தவிர்த்துள்ளனர்.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில், பிரதான எதிர்க்கட்சிகளான அ.தி.மு.க., – பா.ஜ., – தே.மு.தி.க., போன்ற கட்சிகள், தேர்தலை புறக்கணித்து ஒதுங்கியது. பா.ம.க., உட்பட சில கட்சிகள் தங்கள் நிலைப்பாட்டை உறுதி செய்யாமல் நின்றுள்ளனர்.

## பங்கேற்கவில்லை

இதனால் தி.மு.க., – நா.த.க., தவிர சுயேட்சைகளே களத்தில் உள்ளதால், தி.மு.க., ஆரம்பம் முதல் வெற்றி பெற்றுவிடுவோம் என்ற நம்பிக்கையில் பயணிக்கிறது. அதனால், முதல்வர், துணை முதல்வர், எம்.பி., கனிமொழி உட்பட அக்கட்சி அமைச்சர்கள் கூட பிரசாரம், மக்கள் சந்திப்பில் பங்கேற்கவில்லை.

கடந்த, 2 முறை காங்., சார்பில் திருமகன் ஈவெரா, இளங்கோவன் இத்தொகுதியில் நின்று இறந்ததால், தமிழக காங்., தலைவர் செல்வப்பெருந்தகை, முன்னாள் தமிழக தலைவர்கள் திருநாவுக்கரசர், தங்கபாலு ஆகியோர் பிரசாரத்துக்கு பெயரளவில் வந்து சென்றனர்.

இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தலைவர் காதர் முகைதீன், இ.கம்யூ., மாநில செயலர் முத்தரசன், ம.தி.மு.க., துரை வைகோ ஆகியோரும் பங்கேற்று சென்றனர். மா.கம்யூ., மாநில செயலர் சண்முகம், விடுதலை சிறுத்தைகள் திருமாவளவன் உட்பட பிற சிறிய அமைப்பு தலைவர்கள் கூட பங்கேற்கவில்லை.

## பெயரளவில் பிரசாரம்

அதேநேரம், தி.மு.க.,வும் மிகச் சில நாட்கள் மட்டுமே களத்தில் பிரசாரம் செய்ததால், கூட்டணி கட்சி நிர்வாகிகளை வற்புறுத்தி பிரசாரம் செய்ய அழைக்கவில்லை.

'கடந்த, 2 முறை காங்., நின்றது. அப்போது கடுமையாக, தி.மு.க.,வினர் உழைத்ததால், நம்மை அழைத்தாலும், அழைக்காவிட்டாலும் நாம் பிரசாரத்திற்கு செல்வோம்' என, இளங்கோவனின் இளைய மகன் சஞ்சய் சம்பத் கூறியதால், பெயரளவில் காங்., நிர்வாகிகள் சிலர் மட்டும் தி.மு.க.,வினருடன் பிரசாரத்துக்கு வருகின்றனர்.

கூட்டணியில் உள்ள பிற கட்சி நிர்வாகிகள், கட்சிக் கொடியை தி.மு.க.,வினரிடம் கொடுத்து, வாகனத்தில் கட்டி வைத்துக் கொள்ளவும், பணிமனையில் வைக்கவும் மட்டும் செய்தனர்.

இதனால், ஒவ்வொரு பகுதியிலும் தி.மு.க., மற்றும் அதன் கூட்டணி கட்சியினர், அக்கட்சி அல்லது அந்த அமைப்பு சார்ந்தவர்களைக்கூட முறையாக சந்திக்கவில்லை, என்ற குறைபாடு நீடிக்கிறது.

'எப்படியும் வெற்றி பெற்று விடுவோம்' என்ற எண்ணத்தால், வாக்காளர்களை புறக்கணிப்பதாகவே எண்ணுகின்றனர். இதனால் வரும், 5ல் நடக்கும் ஓட்டுப்பதிவில், ஓட்டுப்பதிவு சதவீதம் குறைய வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

DINAMANI

Dated: 03.02.2025

# ஈரோடு கிழக்கு: வாக்கு சேகரிப்பின்போது மோதல்

ஈரோடு, பிப்.2: ஈரோட்டில் திமுக வேட்பாளரை ஆதரித்து துண்டறிக்கைகளை வழங்கிய தந்தை பெரியார் திராவிடர் கழகத்தினரை நாம் தமிழர் கட்சியினர் தாக்கியதால் பரபரப்பு ஏற்பட்டது. இது தொடர்பாக 50 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தல் வாக்குப் பதிவு பிப்ரவரி 5-ஆம் தேதி நடைபெறவுள்ளது. இதற்கான பிரசாரம் திங்கள்கிழமை (பிப்ரவரி3) மாலையுடன் நிறைவடைய உள்ளது. இந்நிலையில், திமுக, நாம் தமிழர் கட்சி மற்றும் சுயேச்சை வேட்பாளர்கள் ஞாயிற்றுக்கிழமை காலை தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

பன்னீர்செல்வம் பூங்கா அருகே உள்ள சிஎஸ்ஐ பிரப் தேவாலயம் முன்பு நாம் தமிழர் கட்சி வேட்பாளர் சீதாலட்சுமி தனது ஆதரவாளர்களுடன் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது, அதே பகுதியில் தபெதிகவினரும் திமுக வேட்பாளர் சந்திரகுமாரை ஆதரித்து ஈரோடு மாவட்டத்துக்கு பெரியார் ஈவெரா செய்த திட்டங்கள், பெரியார் ஈவெராவை அவதூறாக பேசியவர்களை புறக்கணிப்போம் என்ற தலைப்பில் துண்டுப் பிரசுரம் வழங்கினர். அப்போது தபெதிகவினர் துண்டுப் பிரசுரங்களை நாம் தமிழர் கட்சியினரிடம் வழங்கியதால் சலசலப்பு ஏற்பட்டது.

இதையடுத்து, அப்பகுதியில் இருந்து தபெதிகவினரை காவல் துறையினர் அப்புறப்படுத்தினர். இருப்பினும் சாலையின் மறுபக்கத்தில் நின்றபடி தபெதிகவினர் தொடர்ந்து துண்டுப் பிரசுரங்களை விநியோகம் செய்தனர். இதனையறிந்த நாம் தமிழர் கட்சியினர், தபெதிகவினரை தாக்கி அவர்கள் வைத்திருந்த துண்டுப் பிரசுரங்களை கிழித்தனர்.

இதையடுத்து அங்கிருந்த காவல் துறையினர் தபெதிகவினரை மீட்டு அப்புறப்படுத்தினர். அப்போது, சம்பவ இடத்துக்கு வந்த தபெதிக மாவட்டச் செயலாளர் குமரகுருபரன், நாம் தமிழர் கட்சியினரை அவதூறாக பேசினாராம். தொடர்ந்து அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்ட நிலையில் 50-க்கும் மேற்பட்ட காவல் துறையினர் குவிக்கப்பட்டனர்.

**வேட்பாளர் உள்பட 50 பேர் மீது வழக்குப் பதிவு:** ஈரோடு பிரப் சாலையில் அமைந்துள்ள சிஎஸ்ஐ பிரப் தேவாலயம் முன்பு நாம் தமிழர் கட்சி வேட்பாளர் சீதாலட்சுமி மற்றும் 50 பேர் பிரசாரம் செய்ய தேர்தல் ஆணையத்தில் உரிய அனுமதிபெறவில்லை எனக் கூறப்படுகிறது. நாம் தமிழர் கட்சியினர் தேவாலயம் முன்பு திரண்டபோது அங்கு வந்த தேர்தல் பறக்கும்படை அதிகாரி தினகரன் அவர்களை கலைந்து செல்லுமாறு அறிவுறுத்தினார். அதனை பொருட்படுத்தாமல் தேவாலயம் உள்ளே வேட்பாளர் சீதாலட்சுமியுடன் சிலர் சென்று துண்டுப் பிரசுரங்களை வழங்கினர்.

இந்நிலையில் உரிய அனுமதி பெறாமல் கலகம் ஏற்படுத்த வேண்டும் என்ற உள்நோக்கத்தில் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டதாக, ஈரோடு நகர காவல் நிலையத்தில் பறக்கும் படை அதிகாரி தினகரன் அளித்த புகாரின்பேரில், நாம் தமிழர் கட்சியின் வேட்பாளர் சீதாலட்சுமி மற்றும் 50 பேர் மீது மூன்று பிரிவுகளில் போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர்.



போலீஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட நாம் தமிழர் கட்சியினர்.

DINAMANI
Dated: 03.02.2025

# ஈரோடு இடைத்தேர்தல்: பிரசாரம் இன்று நிறைவு

**ஈரோடு, பிப். 2:** ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் பிரசாரம் திங்கள்கிழமை (பிப். 3) மாலையுடன் நிறைவு பெறும் நிலையில், திமுக–நாம் தமிழர் கட்சியினர் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஈரோடு கிழக்கு தொகுதி சட்டப்பேரவைத் தொகுதி உறுப்பினராக இருந்த ஈவிகேஎஸ் இளங்கோவன் மரணம் அடைந்ததைத் தொடர்ந்து, பிப். 5–ஆம் தேதி இடைத்தேர்தல் நடைபெறுகிறது. திமுக சார்பில் வி.சி. சந்திரகுமார், நாம் தமிழர் கட்சி சார்பில் மா.கி.சீதாலட்சுமி ஆகியோர் போட்டியிடுகின்றனர். முக்கிய எதிர்க் கட்சிகளான அதிமுக, பாஜக ஆகியவை இடைத்தேர்தலைப் புறக்கணித்துள்ளன.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் 46 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். சுயேச்சைகள் வாக்காளர்களின் கவனத்தை ஈர்க்காத நிலையில், இருமுனைப் போட்டியே நிலவுகிறது.

வேட்பாளர் அறிவிக்கப்பட்ட உடனேயே திமுக தேர்தல் பணியை தீவிரப்படுத்தியது. அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில் கூட்டணிக் கட்சித் தலைவர்கள் ஈரோடு கிழக்கு தொகுதியில் உள்ள ஒவ்வொரு பகுதியாக வீடுவீடாகச் சென்று மக்களை நேரடியாகச் சந்தித்து பிரசாரத்தில் ஈடுபட்டனர். ஈரோடு மாநகராட்சியில் மொத்தம் 60 வார்டுகள் இருந்தாலும் ஈரோடு கிழக்கு தொகுதி 33 வார்டுகளை உள்ளடக்கி உள்ளது.

இந்த 33 வார்டுகளிலும் திமுகவினர் தங்களது பிரசாரத்தை முடித்துவிட்டனர். இதேபோல நாம் தமிழர் கட்சி வேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்து அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கடந்த 24–ஆம் தேதி முதல் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார்.

பொதுக்கூட்டத்தில் பெரியார் ஈவெரா குறித்து அவர் பேசும் பேச்சுகள் தொடர்ந்து சர்ச்சையாகி வருகின்றன. மேலும், தேர்தல் விதிமுறைகளை மீறியதாக அவர் மீதும், வேட்பாளர், நிர்வாகிகள் மீதும் பல்வேறு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்நிலையில், திங்கள்கிழமை மாலை 6 மணியுடன் தேர்தல் பிரசாரம் நிறைவடைகிறது. ஈரோட்டில் தங்கி இருக்கும் வெளியூர் கட்சி நிர்வாகிகள் திங்கள்கிழமை இரவுக்குள் வெளியேற உத்தரவிடப்பட்டுள்ளது.

வாக்குப் பதிவுக்காக 53 இடங்களில் 237 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதைத் தொடர்ந்து பிப். 8–ஆம் தேதி சித்தோட்டில் உள்ள அரசுப் பொறியியல் கல்லூரியில் வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது.

DINAKARAN
Dated: 03.02.2025

## நாளை மறுநாள் சட்டப்பேரவை தேர்தல்

# டெல்லியில் பிரசாரம் இன்று ஓய்கிறது

புதுடெல்லி, பிப். 3: டெல்லி சட்டப்பேரவை தேர்தல் நாளை மறுதினம் நடைபெற உள்ள நிலையில், இன்று மாலையுடன் பிரசாரம் ஓய்கிறது. இந்த தேர்தலில் ஆம்ஆத்மி, பாஜ, காங்கிரஸ் ஆகிய கட்சிகள் இறுதிகட்ட வாக்குசேரிப்பில் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

**இறுதிகட்ட வாக்குசேகரிப்பில் முக்கிய கட்சிகள் மும்முரம்**

| | |
|---|---|
| தொகுதிகள் | 70 |
| வேட்பாளர்கள் | 699 |
| வாக்குப்பதிவு | பிப். 5 |
| வாக்கு எண்ணிக்கை | பிப். 8 |

டெல்லியில் 70 தொகுதிகளுக்கான சட்டப்பேரவை தேர்தல் ஒரே கட்டமாக நாளை மறுதினம் நடக்க உள்ளது. அதில் பதிவாகும் வாக்குகள் வரும் 8ம் தேதி எண்ணப்பட்டு, அன்றைய தினம் முடிவுகள் அறிவிக்கப்படும். தலைநகர் என்பதால் டெல்லியில் ஆட்சியை பிடிக்க ஆளும் ஆம் ஆத்மி, பாஜ, காங்கிரஸ் இடையே மும்முனை போட்டி நிலவுகிறது. இத்தேர்தலில் மொத்தம் 699 பேர் போட்டியிடுகின்றனர். முன்னாள் முதல்வரும், ஆளும் ஆம் ஆத்மி கட்சித் தலைவருமான கெஜ்ரிவால் போட்டியிடும் புதுடெல்லி தொகுதியில் அதிகபட்சமாக 23 பேர் போட்டியில் உள்ளனர்.

இந்நிலையில் பரபரப்பாக நடந்து வரும் பிரசாரம் இன்று மாலை 5 மணியுடன் ஓய்கிறது. இதனால் இறுதிகட்ட பிரசாரங்கள் நேற்றே தீவிரமடைந்தன. பிரதமர் மோடி ஆர்கே நகரில் பிரமாண்ட பொதுக்கூட்டத்தில் உரையாடினார். மக்களவை காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி, ஆம் ஆத்மி ஒருங்கிணைப்பாளர் கெஜ்ரிவால் உள்ளிட்ட தலைவர்களும் இறுதிகட்ட வாக்கு சேகரிப்பில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.



டெல்லியில் தொடர்ந்து 15 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்த காங்கிரஸ், கடந்த 2 சட்டப்பேரவை தேர்தல்களில் பின்னடைவுகளைச் சந்தித்தது. கடந்த 2015 மற்றும் 2020 சட்டமன்றத் தேர்தல்களில் ஆம் ஆத்மி ஆட்சியை பிடித்தது. தற்போதைய தேர்தலில் ஆளும் ஆம் ஆத்மி கட்சிக்கும், பாஜவுக்கும் கடுமையான போட்டி ஏற்பட்டுள்ளதால் எந்த கட்சி ஆட்சியை பிடிக்கும்? காங்கிரஸ் எத்தனை சீட்களை பெறும் என்பது எதிர்பார்ப்பாக உள்ளது.

இன்று முதல் அனைத்து வாக்குச்சாவடிகளுக்கும் வாக்குப்பதிவு இயந்திரங்கள் கொண்டு செல்லப்படும். அதற்கான வேலைகளை தேர்தல் ஆணையம் துரிதப்படுத்தி உள்ளது. அதேபோல் வாக்குப்பதிவு அமைதியான முறையில் நடப்பதை உறுதி செய்யும் வகையில், பதற்றமான வாக்குச்சாவடிகள், டெல்லியின் எல்லைகளில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

DINAKARAN

Dated: 03.02.2025

# நாதக வேட்பாளரை தகுதி நீக்க போராட்டம்

## சீமானையும் கைது செய்யக்கோரி தர்ணா

ஈரோடு, பிப். 3: ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தலில் சுயேச்சை வேட்பாளர் வெண்ணிலாவுக்கு ஆதரவு திரட்டி மே17 இயக்க ஒருங்கிணைப்பாளர் திருமுருகன்காந்தி உள்பட தமிழ் தேசிய கூட்டமைப்பினர் பிரசாரம் செய்து வருகின்றனர். இந்நிலையில், நாதகவினர் மீது புகார் கொடுக்க வேட்பாளர் வெண்ணிலா மற்றும் கூட்டமைப்பினர், ஈரோடு மாநகராட்சி அலுவலகத்துக்கு நேற்று மாலை வந்தனர். அவர்கள் மாநகராட்சி அலுவலக வளாகத்தில் அமர்ந்து சீமானை கைது செய்யக்கோரியும், நாதக வேட்பாளரை தகுதி நீக்க கோரியும் கோஷங்களை எழுப்பினர்.

தகவலறிந்து டவுன் போலீசார் வந்து அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது, போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் நாதக ஒருங்கிணைப்பாளர் சீமான் வாக்காளர்களை அச்சுறுத்தும் வகையில் வெடிகுண்டு வீசுவதாக பேசியுள்ளார். அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. சீமானை தொகுதியில் இருந்து வெளியேற்றி அவரது பிரசாரத்துக்கு தடை விதிக்க வேண்டும்.

தபெதிகவினர் மீது நாதகவினர் தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர். எனவே வேட்பாளரை தகுதி நீக்கம் செய்ய வேண்டும்' என்றனர். அதற்கு போலீசார், “சீமான் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. புகார் கொடுத்தால் நடவடிக்கை எடுக்கப்படும்” என்று உறுதி அளித்தனர். இதையடுத்து அனைவரும் கலைந்து சென்றனர்.



நாதக வேட்பாளரை தகுதி நீக்கம் செய்ய கோரியும், சீமானை கைது செய்ய வலியுறுத்தியும் தர்ணாவில் ஈடுபட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பினர்.

DINAKARAN

Dated: 03.02.2025

### ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில்

# திமுக கூட்டணி அமோக வெற்றி பெறும்

## கருத்துக்கணிப்பில் தகவல்

சென்னை, பிப்.3: ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் திமுக கூட்டணி பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் அமோக வெற்றி பெறும் என கருத்து கணிப்பு வெளியாகி உள்ளது.

சென்னையில் பேராசிரியர் ராஜநாயகம் வழிக்காட்டுதல் குழு, நிருபர்களிடம் கூறியதாவது:

'மக்களை ஆய்வது மக்களுக்காகவே' என்ற கூற்றின் அடிப்படையில் கடந்த 25 ஆண்டுகளாக தேர்தல் தொடர்பான கள ஆய்வுகளில் ஈடுபட்டு வரும் மக்கள் ஆய்வகம் தற்போது ஈரோடு இடைத்தேர்தல் தொடர்பாக மக்களை சந்தித்தது. அதன்படி, ஜன.28 - 31ம் தேதி வரை 118 இடங்களில், 1470 வாக்காளர்களிடம் இந்த ஆய்வு நடத்தப்பட்டு தகவல்களை சேகரித்தோம்.

அந்த வகையில் ஈரோடு இடைத்தேர்தலில் வாக்காளர்களின் பெரும்பான்மை ஆதரவோடு திமுக கூட்டணி முன்னிலையில் உள்ளது. அதன்படி, திமுகவிற்கு 59.5% வாக்குகளும், நாதகவிற்கு 16.7% வாக்குகளும் பிற வேட்பாளர்களுக்கு 1% வாக்குகளும் பதிவாகும் என கணிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, முந்தைய தேர்தல்களோடு ஒப்பிடுகையில் வாக்களிப்பதில் ஆர்வமில்லாதவர்கள் எண்ணிக்கை 17.6% உள்ளது கவனிக்கத்தக்கதாகும். மேலும், திமுக கூட்டணிக்கு பெரிய தலைவர்களின் பிரசாரம் ஏதுமின்றியே அக்கட்சியின் வேட்பாளருக்கான ஆதரவு 70 விழுக்காட்டை தாண்ட வாய்ப்புள்ளது. அதேபோல், இந்த இடைத்தேர்தலை அதிமுக, பாஜ, தவெக ஆகிய கட்சிகளின் புறக்கணித்த நிலையில் அந்த வாக்குகள் பிரியவும் வாய்ப்புகள் உள்ளன.

அதேபோல், 2026ம் ஆண்டிற்கான சட்டமன்ற தேர்தலில் முதல்வராக மீண்டும் மு.க.ஸ்டாலின் வர வேண்டும் என 31.5 சதவீதம் மக்கள் விருப்பம் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

DINAKARAN

Dated: 03.02.2025

ஈரோடு இடைத்தேர்தல் பிரசாரத்தில்

# நாதக-தபெதிகவினர் மோதல்

## வேட்பாளர் சீதாலட்சுமி உள்ளிட்ட 51 பேர் மீது வழக்கு



ஈரோடு பன்னீர்செல்வம் பூங்கா சிஎஸ்ஐ சர்ச் முன் வாக்கு சேகரிப்பின்போது, கடுமையாக மோதிக்கொண்ட நாதக, தபெதிகவினரை தடுக்கும் போலீசார்.

ஈரோடு, பிப்.3: ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலையொட்டி பிரசாரம் மேற்கொண்டபோது நாதக-தபெதிக தொண்டர்களிடையே ஏற்பட்ட மோதல் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் வாக்குப்பதிவு வரும் 5ம் தேதி நடைபெறுகிறது. திமுக, நாதக உள்ளிட்ட 46 வேட்பாளர்கள் பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். உரிய அனுமதியின்றி கட்சி கொடிகள், பேனர்கள் வைத்தது, அனுமதியின்றி பிரசாரம் மேற்கொண்டது உள்ளிட்ட காரணங்களால் நாதக வேட்பாளர் மற்றும் கட்சியினர் மீது 10க்கும் மேற்பட்ட வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. குறிப்பாக, வெடிகுண்டு வீசுவேன் என கூறிய சீமான் மீது 5 வழக்குகள் பதிவு செய்யப்பட்டது.

இந்நிலையில், நாதக வேட்பாளர் சீதாலட்சுமியும், அவரது கட்சியினரும், நேற்று பன்னீர்செல்வம் பூங்கா பகுதியில் உள்ள பழமையான சிஎஸ்ஐ சர்ச் முன் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர். அப்போது, அதே பகுதியில் தந்தை பெரியார் பற்றி அவதூறாக பேசிய சீமானை கண்டிக்கும் வகையில், தபெதிகவினர் பொதுமக்களிடத்தில் துண்டு பிரசுரங்கள் விநியோகித்தனர்.

அதில், சீமான் புகைப்படத்தை ஒருபுறம் நாம் தமிழர் கட்சி போலவும், மறுபுறம் பாஜவின் காவி உடை அணிந்தபடி இருப்பது போலவும், கார்ட்டூன் புகைப்படத்தை போட்டு திமுகவுக்கு ஆதரவாக பிரசாரம் மேற்கொள்வது போலவும் அச்சிடப்பட்டிருந்தது. இதனால், நாதகவினருக்கும், தபெதிகவினருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டு, மோதல், தள்ளுமுள்ளு உருவானது. இதனையடுத்து, இருதரப்பினரையும் தடுத்து நிறுத்திய போலீசார், அமைதியாக செல்லும்படி அறிவுறுத்தினர்.

நாதகவினர் தாக்கியதில் காயமடைந்ததாக தபெதிகவை சேர்ந்த ஜபருல்லா (45), சந்திரன் (34), ரஞ்சித்குமார் (41) ஆகியோர் ஈரோடு அரசு மருத்துவமனையில் உள்நோயாளிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர். இதுபற்றி தபெதிக மாவட்ட செயலாளர் குமரகுருபன் கூறுகையில், "தந்தை பெரியார் குறித்து அவதூறாக பேசிய நாதக ஒருங்கிணைப்பாளர் சீமான் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையெனில், நாதகவினர் மீது பதில் தாக்குதல் நடத்துவோம்" என்றார்.

இந்த மோதல் தொடர்பாக பறக்கும்படை அதிகாரி தினகரன் ஈரோடு டவுன் போலீசில் அளித்த புகாரின் பேரில் நாதக வேட்பாளர் சீதாலட்சுமி உள்ளிட்ட 51 பேர் ஓட்டு சேகரித்ததாகவும் கூறியிருந்தார். அதன் அடிப்படையில், 3 பிரிவுகளின் கீழ் போலீசார் வழக்குப்பதிவு செய்தனர்.